666

THE "VAKIL" TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS

இந்த இதழில்

இந்தியப் பிரஜை யார்?

ஜீவாதார உரிமைகள்

மானேஜ்மெண்ட் பள்ளிக்
கூடங்களை சர்க்கார்
நடத்த

மின்சார சப்ளையை
சர்க்காரே நடத்த

வழக்கும்-தீர்ப்பும்

கேள்வி-பதில்

வருமானவரிச் சட்டம்

இனம் பத்திரங்கள்

கண்ட்ரோல் உத்திரவுகள்

சர்க்கார் அறிக்கைகள்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் மாதப் பத்திரிகை

மார்ச்சு 1950

தபால் பெட்டி நெ. 26. கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK

(பிராஞ்சு: மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம். அரைக்கீரைவிதைத்தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

...E AGENTS:

For Madras	For Coimbatore, Palghat & Nilgiris
...Suraj Agencies,	**B. Balapattabi Chettiar,**
Madras.	246, Vysyal St, Coimbatore.

முக்கிய அறிவிப்பு

1949 ஏப்ரல் மாதம் முதல் "வக்கீல்" வருட சந்தாதாரராகச் சேர்ந்த நேயர்களுக்கு இந்த இதழுடன் 12 இதழ்கள் அனுப்பப்பட்டு விட்டபடியால், தயவு செய்து அடுத்த 12 இதழ்களுக்குள்ள சந்தாத் தொகை ரூ. 3-யும் மணியார்டர் மூலம் "மானேஜர், வக்கீல் காரியாலயம், தபால் பெட்டி 26, கும்பகோணம்" என்ற விலாசத்திற்கு அனுப்பவும். தனித்தனித் தபால் எழுதுவது சாத்தியமல்ல; மன்னிக்கவும்.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A. B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்)	...	0—4—0
முந்திய மாதப் பிரதி	...	0—6—0
வெளிநாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

விளம்பர விகிதம்

ஒருமுறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்)	ரூ.	100
உள் அட்டை முழுப்பக்கம்	ரூ.	80
உள் பக்கம் முழுப்பக்கம்	ரூ.	60
ஷி ... அரை பக்கம்	ரூ.	35
ஷி ... கால் பக்கம்	ரூ.	20
ஒரு காலம் – அங்குலம்	ரூ.	5

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 மார்ச்சு '50 இதழ் 3

பொருள் அடக்கம்

குறிப்புகள் 3

புதிய சட்டங்கள்

இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்-இந்தியப் பிரஜை யார்? 5
ஜீவாதார உரிமைகள் 7
பள்ளிக்கூடங்கள், காலேஜ் முதலிய கல்வி ஸ்தாபனங்களின் சொத்துக்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளச் சட்டம் 9
ஜமீன் இனும் ஒழிப்பு சட்டத் திருத்தம் 10
ஷோலாப்பூர் நெசவு ஆலையை மத்திய சர்க்காரே நடத்த அவசரச் சட்டம் 11
மின்சார விநியோகத்தை சர்க்காரே எடுத்து நடத்த சட்டம் 11

வழக்கும்-தீர்ப்பும் 12
கேள்வியும்-பதிலும் 15
பத்திரங்கள்-இனும் சாசனங்கள் 19
வருமான வரி 21
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள் 23

எல்லாவித உயர்தர அச்சு வேலைகளுக்கு:

ஹோமியோபதி பிரஸ்

பாணாதுரை சன்னதி ::: கும்பகோணம்

வெளியூர் வேலைகளும் உடனுக்குடன் கவனிக்கப்படும்

"வக்கீல்" பத்திரிகை

டிராவலிங் இன்ஸ்பெக்டர் திரு. தண்டாங்கோரை S. வெங்கடராமன் அவர்களுக்கு எல்லா இடங்களிலும் "வக்கீல்" பத்திரிகைக்கு சந்தாதார்கள் சேர்க்கவும், விளம்பரம் சேர்க்கவும் ஏஜண்டு அப்ளிகேஷன் பெற்றுக்கொண்டு ஆபீசுக்கு அனுப்பவும் அதிகாரம் உண்டு.

பெட்ரூம் லேட்டுத் திரி, பட்டுக் கயிறு,
பின்னல்கயிறு, தாலிக்கயிறு, இடுப்புக்கயிறு
முதலியவைகளுக்கு எழுதவும்.
சாம்பிள் இனும்.

ஸ்ரீ ஜானகி & Co.,
39/A பால்மால் குறுக்குத்தெரு, மதுரை.

சவுத் இந்தியன் சோப் ஓர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்

தயாரிப்புகள்:—

அப்ஜா—ஆனந்தா—கதம்பா
ரஞ்சிதா—நீரடிமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள்
யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே
தேவைக்கு எழுதவும்.

WANTED SUB DEALERS

To represent

COSSOR RADIOS

in all Towns in Tanjore District

187695

Apply to:

CHINTHAMANI RADIO HOUSE

Sole Distributors for Cossor Radios for Tanjore Dt.

GANDIJI ROAD, :: TANJORE.

உயர்தரமான **நாதன்** காப்பித் தூளையே
எப்பொழுதும் வாங்கி உபயோகியுங்கள்

எலெக்ட்ரிக் மெஷினில் வருத்து
அரைக்கப்பெற்றது

குணம், மணம் நிறைந்தது

ஒரு முறை உபயோகித்தால்
உண்மை விளங்கும்

நாதன் காப்பி ஓர்க்ஸ்,

பெரியகடைத்தெரு. :: கும்பகோணம்.

உரிமையாளர்: P. சாமிநாதன் & ஸன்ஸ்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 மார்ச்சு 1950 இதழ் 3

குறிப்புகள்

இவ்விதம் பல சட்டங்கள் வேண்டும்: பொதுமக்கள் துணி விற்று, அரிசி வாங்கி, அரிசி விற்றுத் துணி வாங்கி, உயிரையும் மானத்தையும் காப்பாற்ற முயற்சி செய்யும் இக்காலத்தில், எவ்வளவு ரூபாய் லாபம் வந்தாலும் திருப்தி அடையாத ஒரு சில அரக்கர்கள் நம் நாட்டில் இருக்கின்றனர். மக்களுக்கு அவசியமான பொருள்கள் நாட்டில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டாலும் இவர்கள் ஒரு 'செயற்கைப் பஞ்சத்தை' உண்டுபண்ணி அவர்களுக்குத் திருப்தியான பணத்தைப் பொதுமக்கள் கொடுத்தாலொழிய இப்பொருள்களை 'விடுதலை' செய்வதில்லை. சர்க்கரை எவ்வளவு நம் நாட்டுக்குத் தேவையோ, அதற்கு மேல் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இருந்தாலும் சர்க்கரைப் பஞ்சம். நம் நாட்டிலுள்ள ஆலைகளைக் கொண்டு நாமும் துணி உடுத்திக்கொண்டு பிற நாட்டிற்கும் விற்கலாம். இருந்தாலும் துணிப்பஞ்சம்.

இவ்விதமான நிலைமையை ஒரு பொருள் விட்டு ஒரு பொருளுக்கு மாற்றி மாற்றி உண்டாக்கிக் கொண்டிருக்கும் ஜால வித்தைக்காரர்கள் இவர்கள்.

ஒரு பொருளை உற்பத்தி செய்வதும் பொதுமக்கள். அதை உபயோகப்படுத்துவதும் பொதுமக்கள். இப்போது இருக்கும் நிலைமையில், இவ்விருவர்களும் ஏமாற்றப்படுகின்றனர். உழைப்பாளியைப் பார்த்து, "குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டு இந்த வேலையைச் செய், உனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேலை கிடையாது போ" என்று அதிகாரத்துடன் சொல்லும் அதே மனிதன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு அப்பொருள்களை உபயோகப்படுத்தவேண்டிய மனிதனை நோக்கி, "நாலு மடங்கு விலை கொடுத்தால்தான் உனக்கு இச்சாமானைக் கொடுப்பேன். இல்லாவிட்டால் உனக்குச் சாமான் கிடையாது போ" என்று சொல்கிறான். இவன் யார்? இவன் அடையாளமென்ன? தனி மனிதனாக இருக்கிறானா? தன்னைப்போல் பல பெயர்களைச் சேர்த்துக்கொண்டு 'கம்பெனி' அல்லது 'சிண்டிகேட்' என்று பெயரை வைத்துக்கொண்டு, மாறுவேடம் போட்டுக்கொண்டிருக்கிறானா? இவன் யாராக இருந்தாலும் இவனைக் கண்டு பிடித்து, சமூகத்தைவிட்டு அவனை அகற்றாத எந்தச் சர்க்காரும் தன் கடமையைச் செய்ததாகாது.

பம்பாய் மாகாணத்தில் ஷோலாப்பூர் என்ற இடத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஒரு துணி நெசவு ஆலையைப்பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். இவ்வாலையை ஒரு

கம்பெனியார் நடத்திவந்தனர். இப்போது வரும் லாபம் இவர்களுக்குப் போதவில்லை போலும்! அதன் டைரெக்டர்களின் ஊழல்களினாலும், அசட்டையாலும் இப்பெரிய ஆலையே மூட்டப்பட்டு ஜவுளி உற்பத்தியும் நின்று விட்டது. அதில் வேலை செய்த பல்லாயிரக்கணக்கான ஜனங்களும் வேலை இழந்தனர். அன்னிய ஆட்சியில் ஒன்றும் செய்திருக்கமாட்டார்கள். ஒரு வேளை ஆலையை மூடியவர்களுக்குப் பட்டங்கள் வழங்கி இருப்பார்கள். ஆனால் இப்பொழுது நமது மத்திய சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? இந்த ஒரு கம்பெனியின் நிர்வாகத்தைத் தாங்களே நடத்த ஒரு அவசரச் சட்டம் இயற்றி இருக்கின்றனர். அதன் ஷரத்துக்களை இவ்விதழில் வேறு இடத்தில் படிக்கலாம். இவ்விதமான சட்டங்களைப்பொதுமக்கள் வரவேற்க வேண்டியதே. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்கள் சம்பந்தப்பட்டவரையில் அவைகளின் உற்பத்தியையும் விநியோகத்தையும் சுய நலக்காரர்களிடமிருந்து பிடுங்கி, சர்க்காரே ஏற்றுக்கொள்வதை மக்கள் ஆதரிக்கவேண்டிய நிலைமை வந்து விட்டது. இவ்விதம் பல சட்டங்கள் வேண்டும்!

நேயர்களின் கேள்வியும், "வக்கீலின்" பதிலும்: "வக்கீல்" பத்திரிகையின் கேள்வி-பதில் என்ற பகுதியை நேயர்கள் உபயோகப்படுத்திக்கொள்ளும் முறை நமக்கு மிக ஊக்கமளிப்பதுடன் இப்பணியை இன்னும் விஸ்தரிக்கவும் தூண்டுகிறது. ஒரு நேயர் கேட்கும் கேள்வியும், அதன் பதிலும் பல நேயர்களுக்கு அதே விஷயத்தில் உண்டாகும் சந்தேகங்களை நீக்கலாம். அல்லது புதுச் சந்தேகங்களையும் உண்டாக்கலாம். அதற்காகப் புது கேள்விகள் கேட்க நேரலாம். அன்பர்கள் அனுப்பும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் அந்தந்த மாத இதழிலேயே பதில் சொல்லத்தான் எங்களுக்கும் ஆசை. ஆனால், முடியவில்லை. முதலாவதாக, ஒவ்வொரு மாதமும் வரும் கேள்விகளைமட்டில் (பதில் இல்லாமல்) அச்சடிக்க ஒரு இதழின் எல்லாப் பக்கங்களும் போதா. இரண்டாவதாக, முன் இதழ்களில் பதில் அளிக்கப்பட்ட கேள்விகளை மறுபடியும் பிரசுரிப்பது அவசியமல்ல; ஆதலால், அவைகளைப் பொறுக்கி ஒதுக்க வேண்டி இருக்கின்றது. மூன்றாவதாக, சுருக்கமாக இல்லாமல் வளர்த்தி எழுதும் கேள்விகளைச் சுருக்கி எழுதக் கொஞ்சம் அவகாசம் வேண்டும். நான்காவதாக, நேயர்கள் கேட்கும் கேள்விகளில் பல சுலபமாய்ப் பதில் சொல்லக்கூடியவைகளுமல்ல. பல சட்டப் புத்தகங்களைக்கொண்டு செய்யும் ஆராய்ச்சிக்குப் பின்பே அபிப்பிராயம் ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய கேள்விகள் பல. எப்படியும், 15-ஆம் தேதிக்குள் கிடைக்கும் ஒவ்வொரு கேள்விக்கும் அடுத்த இதழில் பதில் வெளி வரும்படி முயற்சி செய்வோம். அப்படி அடுத்த இதழிலேயே பதில் வரா விட்டாலும், அடுத்து வரும் இரண்டொரு இதழ்களிலேயே பதில் வந்துவிடும். அதற்குள் கேள்வி கேட்டவர்கள் மற்ற நேயர்கள் கேட்டிருக்கும் கேள்விகளையும் பதிலையும் கவனித்துப்படித்து வரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். "வக்கீல்" பத்திரிகையை மாதம் இருமுறையாகச் செய்தோ, அல்லது இன்னும் கொஞ்சம் விலை கூடச்செய்து அதிகப் பக்கங்களைச் சேர்த்தோ, பொதுமக்களுக்கு அதிகமான சேவை செய்விப்பதற்கான திட்டம் இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால் "கேள்வி-பதில்" பகுதி கட்டாயமாக விஸ்தரிக்கப்படும். சட்ட விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் நேயர்களுக்குக்காலதாமதமில்லாமல் பணி செய்வதையே இலட்சியமாகக் கொண்டது "வக்கீல்" பத்திரிகை என்பதை மட்டில் இப்போது நேயர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். வணக்கம்.

புதிய சட்டங்கள்

இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்

இந்தியப் பிரஜை யார்?

ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்கம் ஏற்படுவதும் நடத்தப்படுவதும் அதன் பிரஜைகளுக்காகவே. அரசாங்கத்திடம் விசுவாசம் (allegiance) காண்பிக்க வேண்டியது 'பிரஜை'களின் கடமை; 'பிரஜை'களுக்கு இரட்சணை அல்லது பாதுகாப்பு (Protection) அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அந்தந்த நாட்டில் அதனதன் 'பிரஜை'களுக்கு மட்டில் சில உரிமைகள் உண்டு. 'பிரஜை' அல்லாத அன்னியர்களுக்கு அந்த உரிமைகள் இருக்கமாட்டா. ஒரு நாட்டில்இருப்பவர்கள் எல்லோரும் அதன் 'பிரஜை'களாக இருக்கவேண்டுமென்று அவசியமில்லை. உதாரணமாக, இந்நாட்டில் வியாபார சம்பந்தமாய்ப் பல அமெரிக்கர்கள், சீனக்காரர்கள் இலங்கை வாசிகள், பாகிஸ்தானியர்கள் முதலியோர் வந்து வசித்துக்கொண்டிருக்கலாம். இவர்கள் எல்லோரும் இந்தியப்பிரஜைகள் அல்லர். மேலும் பல அன்னிய அரசாங்கங்களிலிருந்து இங்கு வரும் ராஜய தூதர்கள் அவர்களின் மனைவி மக்கள் போன்றவர்களும் மாறி மாறி இந்நாட்டுக்கு வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருப்பார்கள். மேலும் அந்நிய நாட்டிலிருந்து, அங்கிருக்கும் அரசாங்கத்திற்குப் பயந்தோ வேறு காரணமாகவோ சிலர் இந்நாட்டிற்கு வந்து இங்கே தங்கி இருக்கலாம். வேறு நாடுகளில் குற்றம் செய்துவிட்டு, இந்நாட்டில் ஒளிந்து கொள்வோரும் உண்டு. இவ்விதமாய் இந்நாட்டில் வசித்து வரும் பலவகைப்பட்டவர்களில் 'இந்தியப் பிரஜை' யார்? அந்நியர் யார்?

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தியாவின் பிரஜைகளுக்குச் சில விசேஷ உரிமைகள் உண்டு. உதாரணமாக: இந்தியப் 'பிரஜை'யாக இருந்தால்தான் பார்லிமெண்ட், சட்டசபைகள் முதலிய ஸ்தாபனங்களுக்கு நடக்கும் தேர்தல்களில் வாக்கு (ஓட்)க்கொடுக்க உரிமை உண்டு; ஒரு இந்தியப் பிரஜைதான் இந்திய யூனியன் பார்லிமெண்டிலும் மற்றச் சட்ட சபைகளிலும் அங்கத்தினராக இருக்கமுடியும். ஜனாதிபதி அவர்களும், உப ஜனாதிபதியும், கவர்னர்களும், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளும், ஹைகோர்ட் நீதிபதிகளும் 'இந்தியப்பிரஜை'களாகவே இருக்கவேண்டும். இந்தியப் பிரஜைகளுக்கு அரசியல் அமைப்புச் சட்டப்படி சில 'ஜீவாதார உரிமை'களும் உண்டு. இன்னும் இதைப்போல் சட்டங்களில் இந்தியப் பிரஜைகளுக்குப் பல சலுகைகளும், உரிமைகளும், கடமைகளும் உண்டு.

ஆகையால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி "இந்தியப் பிரஜை" என்பவர் யார் என்று தெரிந்து கொள்வது மிக அவசியமாகும்.

ஒருவர் எந்த நாட்டின் பிரஜை என்று கண்டுபிடிக்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, அவர் எந்த நாட்டில் பிறந்தாரோ அந்நாட்டின் பிரஜை என்று சொல்லலாம். இரண்டாவது அவர் எங்குப் பிறந்திருந்தாலும் பாதகமில்லை. அவருடைய பெற்றோர்கள் அல்லது அவர்களுக்கும் முன்னோர்கள் எந்த நாட்டின் பிரஜையோ அவரும்

அதே நாட்டின் பிரஜைதான் என்றும் சொல்லலாம். சிற்சில சமயங்களில் இந்த இரண்டு வழிகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடான முடிவுக்குக் கொண்டுபோய் விடலாம். உதாரணமாக: இந்தியாவில் தாற்காலிகமாக வசித்து வரும் ஒரு அமெரிக்க தம்பதிகளுக்கு இந்தியாவில் ஒரு குழந்தை பிறந்தால் அக்குழந்தை முதல் விதிப்படி இந்தியப் பிரஜையாகும்; இரண்டாவது விதிப்படி அமெரிக்கப் பிரஜையாகும். அது போலவே இந்தியப் பிரஜைகளுக்கு அன்னிய நாட்டில் பிறக்கும் குழந்தைகள் முதல் விதிப்படி இந்தியப் பிரஜைகள் ஆக மாட்டார்கள்; இரண்டாவது விதிப்படி அக்குழந்தைகள் எங்கு பிறந்தாலும் இந்தியப் பிரஜைகளே ஆவார்கள்.

ஆகையால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த சமயத்தில் யார் யார் 'இந்தியப் பிரஜைகள்' என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே விவரமாகக் காணப்பட்டிருக்கிறது. 5 முதல் 11 வரை உள்ள ஷரத்துக்கள் இதை விளக்குகின்றன. அவற்றைக் கவனிப்போம்:

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த தினமாகிய 26-1-1950 அன்று இந்தியாவில் (இந்தியாவின் நிலப்பரப்பு எவை என்று முன்பே சொல்லப்பட்டது.) ஸ்திரவாசமாக இருப்பவர்கள் யாவரும் இந்தியப் பிரஜைகளாவார்கள். ஆனல் அவர்களோ, அவர்களுடைய பெற்ரோர்களில் எவரோ இந்தியாவில் பிறந்தவராக இருக்கவேண்டும். அப்படி இரண்டுமில்லாவிட்டால் அவர் 26—1—1950-க்கு முன் ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் இந்தியாவில்ஸ்திரவாசமுள்ளவராக இருக்கவேண்டும். 'இந்தியா' என்பதில் 'பாகிஸ்தான்' சேர்ந்ததன்று. ஆகையால் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு வருபவர்கள் நமது பிரஜைகளாக மாட்டார்கள். இவர்களைக் குறித்துச் சில விசேஷ விதிகள் இருக்கின்றன. அவையாவன: பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு 19—7—1948க்கு முன் வந்து இங்கேயே குடியேறி விட்டவர்களும் "இந்தியப் பிரஜைகள்" ஆவார்கள். ஆனல் அவர்களாவது, அவர்களுடைய பெற்ரோர்களாவது, பெற்ரோர்களின் பெற்ரோர்களில் எவராவது பழைய இந்தியாவில் (அதாவது இப்பொழுது இருக்கும் இந்தியா அல்லது பாகிஸ்தானில்) பிறந்தவராக இருக்கவேண்டும். அவ்விதம் பிறந்தவராக இருந்தும் பாகிஸ்தானத்திலிருந்து 19—7—1948-க்குப்பின் இந்தியாவில் குடியேறி இருந்தால் குடியேறி 6 மாதம் சென்று அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் சர்க்கார் அதிகாரியிடம் தாம் 'இந்தியப் பிரஜை' என்று 26—11—49-க்கு முன் பதிவு செய்து கொண்டிருந்தாலும் போதும். இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்தவர் 1—3—1947க்குப் பிறகு பாகிஸ்தானத்திற்குப் போய் அங்கேயே குடியேறி இருந்தால் அவர் மறுபடியும் இந்தியாவிற்கு வந்தாலும் இந்திய பிரஜை ஆகமாட்டார். ஆனல் அவ்விதமானவர்களுக்கும் ஒரு சலுகை காண்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தானில் குடியேற வேண்டுமென்று அங்குப்போய் சிலகாலமிருந்துவிட்டு மறுபடியும் இந்தியாவிற்கே போய்விடுவோம் என்று திரும்பிவந்தவர்களும் சாசுவதமாய் இங்கேயே இருப்பதாகச் சர்க்காரிடம் அனுமதி (பர்மிட்) வாங்கிக்கொண்டாலும் மறுபடியும் 'இந்தியப் பிரஜை' ஆகிவிடுவார்.

இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் எவ்வளவோ பெயர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, மலேயா, சிலோன், பாகிஸ்தான் முதலிய பல அந்நிய நாடுகளில் இருக்கின்றனர். இவர்கள் இந்தியப்பிரஜைகளா? அப்படி வேறுநாட்டில் இருப்பவர் அல்லது அவர்களுடைய பெற்ரோர்கள், அல்லது பெற்ரோர்களின் பெற்ரோர்களில் எவராவது இந்தியாவில் பிறந்தவராக இருந்து அந்நாட்டிலுள்ள இந்திய ராஜதூதரிடம் தாம் இந்தியப் பிரஜை என்று பதிவு செய்து கொண்டவர்களும் இந்திய பிரஜைகளாவார்கள்.

இவ்விதம் உள்ள 'இந்தியப் பிரஜை' தாமாகவே வேற்று நாட்டின் பிரஜையாக மாறிவிட்டால் அவர் உடனே இந்தியப் பிரஜை என்ற அந்தஸ்தை இழந்து விடு

வார். இவர்கள் தவிர, 'இந்தியப் பிரஜை' என்ற அந்தஸ்தும் உரிமையும் ஒருவருக்கு எப்பொழுது உண்டாகும், எப்பொழுது அறுபடும் என்ற விஷயத்தைப்பற்றிப் புதிதாயும் சட்டங்கள் இயற்ற இந்திய யூனியன் பார்லிமெண்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஜீவாதார உரிமைகள்

இந்தியக் குடியரசில் வசிக்கும் மக்களுக்குச் சில விசேஷ உரிமைகள் உண்டு. அரசியல் அமைப்புச் சட்டத்தில் இவைகள் 'Fundamental Rights' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதாவது 'அடிப்படை உரிமைகள்' அல்லது 'ஜீவாதார உரிமைகள்' என்று சொல்லலாம். 24 ஷரத்துக்கள் கொண்ட மூன்றாவது பாகத்தில் இந்த 'ஜீவாதார உரிமை'களைப் பற்றி விவரிக்கப் பட்டிருக்கின்றது. இவைகளைச் சில தலைப்புகளின் கீழ் கவனிப்போம். (1) ஜீவாதார உரிமைகளுக்கும் மற்ற உரிமைகளுக்கும் என்ன வித்தியாசம்? (2) ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்பட்டால் என்ன பரிகாரம் யாரிடத்தில் தேடிக் கொள்ளலாம்? (3) ஜீவாதார உரிமைகள் எவை? என்ற மூன்று தலைப்புகளின் கீழ் ஆராய்வோம்.

ஜீவாதார உரிமைகளுக்கும் மற்ற உரிமைகளுக்கும் என்ன வித்தியாசம்?

சாதாரணமாய் மக்களுக்குள்ள எந்தப் பாத்தியங்களையும், எந்த உரிமைகளையும், புதிதாய் உண்டுபண்ணவும், எடுக்கவும், அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. இவை சம்பந்தமாய்ப் பார்லிமெண்டும், சட்ட சபைகளும் அவை அவைகளின் வரம்புக்குள் சட்டங்கள் செய்யலாம். அச்சட்டங்களை அனுசரித்து, சர்க்காரும் சர்க்கார் அதிகாரிகளும் நடக்கப் பாத்தியமுண்டு. ஆனால், 'ஜீவாதார உரிமைகள்' என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் காணப்பட்டிருக்கும் உரிமைகளை எடுத்தோ, பறித்தோ, குறைத்தோ வேறு எவ்விதத்திலும் பாதித்து இந்திய யூனியன் பார்லிமெண்டுக்காவது, எந்தச் சட்ட சபைகளுக்காவது சட்டம் செய்ய அதிகாரமில்லை; ஜனாதிபதி அவர்களும் கவர்னர்களும் இந்த உரிமைகளைப் பாதித்து அவசரச் சட்டங்கள் செய்ய முடியாது; எந்தச் சர்க்காரும், எந்த அதிகாரிகளும், உத்தியோகஸ்தரும், எந்த ஸ்தல ஸ்தாபனங்களும் இவ்வுரிமைகளைப் பாதிக்கும் விதம் ஒன்றும் செய்ய முடியாது. இவ்வுரிமைகளைப் பாதித்துச் செய்யப்படும் புதிய சட்டங்களும், விதிகளும், சர்க்கார் விளம்பரங்களும் உத்தரவுகளும் செல்லமாட்டா. ஏற்கனவே உள்ள சட்டங்கள், விதிகள், முதலியவைகளும், பழக்க வழக்கங்களுங்கூட 'ஜீவாதார உரிமை'களுக்கு விரோதமாக இருந்தாலும் அவைகளும் செல்லா. ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருக்கும் ஷரத்துக்கள் எல்லாம் குடியரசு அமைப்புச் சட்டத்தால் ரத்தானதாகவே பாவிக்கப்படும்.

ஒரு சமயத்தில் மட்டும் நமது ஜீவாதார உரிமைகள் மறையும்

இவ்விதம் எந்த அரசாங்கமும், எந்தச் சட்டசபையும், சர்க்கார்களும், எந்த அதிகாரியும் தொட முடியாத நமது ஜீவாதார உரிமைகள் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டில் மறையுமென்று காணப்பட்டிருக்கின்றது. அதாவது யுத்தம், அன்னியரால் படையெடுப்பு அல்லது உள்நாட்டு கலகம் காரணமாய் இந்தியாவிற்கு அல்லது அதன் எந்தப் பாகத்திற்கோ பெரிய அபாயம் நேரிடும் தறுவாயில் இருந்தால் ஜனாதிபதி அவர்கள் 'நெருக்கடி' என்று பிரகடனம் செய்யலாம். அவ்விதப் பிரகடனம் ஊர்ஜிதத்தில் இருக்கும் வரை சுதந்திரம் சம்பந்தமான எல்லா ஜீவதார உரிமைகளும்மறையும். அவ்வுரிமைகளை எடுத்தும் பாதித்தும் சட்டம் செய்ய, அரசாங்கத்திற்கு உரிமை வந்துவிடும். அச்சமயத்தில் இவ்வுரிமைகள் போய்விட்டதற்காகச் சுப்ரீம் கோர்ட்டு அல்லது மற்ற நீதிஸ்தலங்களை நாடி, பரிகாரம் தேடிக் கொள்ளும் பாத்தியமும் தாற்காலிகமாகவே மறையும். இது தவிர சைனியத்தில் சேர்ந்திருப்பவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்த ஜீவாதார உரிமைகளில் எவை எவை அவர்களுக்குப் பொருந்துமென்று பார்லிமெண்ட் சட்டம் செய்யலாம்.

ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்பட்டால் என்ன பரிகாரம் தேடிக்கொள்ளலாம்?: ஜீவாதார உரிமைகள் எவை என்று மட்டில் அரசியல் அமைப்பில் வெறும் பிரகடனம் செய்து விட்டால் போதாதென்று கருதி, அவைகளைக் காப்பாற்றவும், அவைகளைப் பாதிப்பவர்களைத் தடுக்கவும், ஒரு சக்தி வாய்ந்த சாதனத்தையும் நம்மிடம் அச்சட்டம் கொடுத்திருக்கின்றது. அந்தச் சாதனம்தான் நமது ஜீவ நாடி. அதுதான் நமது மாபெறும் நீதி மன்றமாகிய சுப்ரீம் கோர்ட். இதுவரை இப்பூவுலகில் இவ்வளவு சக்தி வாய்ந்த நீதிமன்றததை எந்தத் தேசத்திலும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. நமது சுப்ரீம் கோர்ட் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டை விட அதிக சக்தியும் அந்தஸ்தும் வாய்ந்தது. சுப்ரீம் கோர்ட்டின் மற்ற அதிகாரங்களைப்பற்றி பின்பு கவனிப்போம். ஜீவாதார உரிமைகள் சம்பந்தப்பட்டவரையில், மக்களுக்கு இருக்கும் இந்த உரிமைகளைப்பாதுகாக்க வேண்டியது சுப்ரீம்கோர்ட் என்றே சொல்லலாம். எந்த ஜீவாதார உரிமையையும் பாதிக்கும் விதம் எந்தச் சட்டசபையோ, சர்க்காரோ, தனி அதிகாரியோ, யார் என்ன செய்தாலும், பாதிக்கப்பட்டவர் நேரடியாக நமது சுப்ரீம் கோர்ட்டை அணுகலாம். உதாரணமாக, இந்திய மக்களில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் மதாசாரக் கொள்கைகளுக்கேற்றவாறு மதஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், அவைகளைப் பராமரிக்கலாம் என்றும், தங்கள் மதசம்பந்தமான விஷயங்களைத் தாமே நிர்வாகிக்கலாமென்றும் அவ்வித ஸ்தாபனங்களுக்கு எந்த ஸ்தாவரஜங்கம சொத்துக்களும் வாங்கலாமென்றும், சட்டப்படி அவைகளை நிர்வாகம் செய்யலாமென்றும் ஜீவாதார உரிமைகளை விவரிக்கும் ஷரத்துக்களில் ஒன்றாகிய 26 ஆவது ஷரத்தில் காணப்பட்டிருக்கிறது. இது ஒரு ஜீவாதார உரிமை. ஒரு சட்டசபை இதற்கு மாறாகச் சட்டம் செய்ய ஏற்பாடு செய்தால் உடனே அவ்வித சட்டத்தால் பாதிக்கப்படக்கூடியவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் மனுக் கொடுத்து அச்சட்ட சபை அவ்விதம் செய்யக்கூடாதென்று தடை உத்தரவு பெறலாம். அதற்குள் ஒரு பெரும்பான்மையின் பலத்தால் அச்சட்ட சபை அவசர அவசரமாய் அவ்விஷயத்தைச் சட்டமாகவே இயற்றி விட்டாலும் சுப்ரீம் கோர்ட் அச்சட்டம் செல்லாதென்றும் தீர்மானம் செய்து விடலாம். இதற்காகச் சுப்ரீம் கோர்ட்டார் சில பிரசித்தி பெற்ற வழக்கு முறைக் கட்டளைகளை பிரயோகம் செய்யலாம். (இவைகளுக்கு ஆங்கிலத்தில் (1) Habeas corpus (2) Mandamas (3) Prohibition (4) Quo-warranto (5) Certiorari என்று பெயர். இவைகள் என்ன என்று வர்ணிக்க ஒரு அத்தியாயம் வேண்டும். பிந்தி வெளிவரும் இதழ்களில் இவைகள் என்ன என்று விளக்குவோம்.) இதே அதிகாரங்களை மற்ற நீதிஸ்தலங்களும் அவரவர்கள் அதிகார எல்லைக்குள் பிரயோகம் செய்யலாமென்று இந்திய யூனியன் பார்லிமெண்ட் சட்டம் செய்யலாம்.

ஜீவாதார உரிமைகள் எவை

1950 ஜனவரி "வக்கீல்" இதழில் இவைகளைப்பற்றி சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. இவைகளை விவரமாயும் நுட்பங்களுடனும் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் அடுத்த இதழில் கவனிப்போம்:

(1) சமத்துவத்தை வற்புறுத்தும் உரிமைகள்.

(2) சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்கச் சந்தர்ப்பம் அளிக்கும் உரிமைகள்.

(3) அடிமை வாழ்வை நாட்டை விட்டு அகற்றும் உரிமைகள்.

(4) மத சுதந்திரம் அளிக்கும் உரிமைகள்.

(5) சிறு பான்மையோரின் பாஷை, கலை இவைகளைக் காப்பற்றிக் கொள்ளும் உரிமைகள்.

(6) சொத்துக்கள் சம்பந்தமான உரிமைகள்.

இவைகள் அடுத்த இதழில் விளக்கப்படும்.

பள்ளிக்கூடங்கள், காலேஜ் முதலிய கல்வி ஸ்தாபனங்களின் சொத்துக்களை (தாற்காலிகமாக) சர்க்கார் எடுத்துக்கொள்ளச் சட்டம்

(சென்னை 1949 ஆம் வருடத்திய 48 ஆவது சட்டம் 25—1—1950ல் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் அங்கீகாரம் பெற்றது)

தனிப்பட்ட நபர்கள், அல்லது ஸ்தாபனங்கள் அல்லது முனிசிபாலிடி, ஜில்லா போர்ட், பஞ்சாயத்துப்போர்டு போன்ற ஸ்தலஸ்தாபனங்களால் நிர்வாகம் செய்யப்படும் ஸ்கூல்கள், காலேஜ்கள் முதலிய கல்வி ஸ்தாபனங்கள் சர்க்கார் அங்கிகாரத்தின் பேரில் தான் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த கல்வி ஸ்தாபனங்களை நிர்வாகம் செய்பவர்கள் சரிவர அந்த ஸ்தாபனங்களை நடத்தாமல் அதற்காக ஏற்பட்டிருக்கும் விதிகளை மீறினல் சர்க்காருக்கு அங்கீகாரத்தை ரத்து செய்ய உரிமை உண்டு. அவ்விதம் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டவுடன் அந்தப் பள்ளிக்கூடங்களும் காலேஜ்களும் மூடப்படும். அதில் கல்வி கற்கும் மாணவர்கள் படிப்பை நிறுத்தும்படி நேரிடும். படிப்பு வருடம் முடியும் தினத்திற்கு முன் எக்காரணத்தைக் கொண்டும் கல்வி ஸ்தாபனங்கள் மூடப்பட்டாலும் மாணவர்களுக்கு அதே சங்கடம் தான் நேரிடும். ஆகையால் இவ்விதம் சர்க்கார் அங்கிகாரம் ரத்து செய்யப்பட்டாலும், அல்லது படிப்பு வருடம் முடியுமுன்பே எந்தப்பள்ளிக்கூடமும் மூடப்பட்டாலும், உடனே (அல்லது மூன்று மாதங்களுக்குள்) அப்பள்ளிக்கூடம் அல்லது காலேஜின் எல்லாச் சொத்துக்களையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு அக்கல்வி ஸ்தாபனத்தை நடத்த ஏற்பாடு செய்யலாம். அந்தக் கல்வி ஸ்தாபனத்திற்குச் சொந்தமான எல்லா ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களையும், மேஜை, நாற்காலி, பெஞ்சு, போர்டு, முதலிய தளவாட சாமான்களையும் ரிஜிஸ்டர், படம் முதலிய எவ்வகைச் சொத்துக்களையும் அத்துடன் சேர்ந்த ஹாஸ்டல், விளையாட்டு மைதானங்கள் எல்லாவற்றையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு நிர்வாகம் செய்யலாம். எந்தப் படிப்பு வருடத்தில் இவ்விதம் அதன் நிர்வாகத்தை மேற்கொள்கின்றனரோ (அதற்கு அடுத்த) அந்தப் படிப்பு வருடம் முடிய இவ்விதம் சர்க்காரே அச்சொத்துக்களை வைத்துக்கொள்ளலாம். தேவையானல் இன்னும் ஒரு வருடமும் வைத்துக்கொள்ளலாம். கல்வி ஸ்தாபனத்தின் கட்டிடங்களின் சொந்தக்காரருக்குச் சர்க்காரே வாடகைக் கொடுப்பார்கள். வாடகை யாருக்குக் கொடுப்பது என்பதில் தகராறு ஏற்பட்டால் ஜில்லா கலெக்டர் அதைத் தீர்மானிப்பார். அதன் பேரில் ஜில்லா ஜட்ஜுக்கு அப்பீல் உண்டு. இது தான் முடிவான தீர்ப்பு ஜங்கம சொத்துக்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படும். இதை யாருக்குக் கொடுப்பது என்ற விஷயமாய் சர்க்கார் விதிகள் செய்யலாம். சர்க்கார் இவ்விதம் சொத்துக்களை எடுத்துக் கொள்வதை யார் தடுத்தாலும் அவர்களை அதை நீக்கிச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. இச்சட்டப்படி சர்க்கார் செய்யும் எந்த உத்தரவை மீறுவதும் குற்றமாகும். ஆறு மாதம் வரை சிறை தண்டனை அல்லது, ரூ. 1000 வரை அபராதம், அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இச்சட்டத்தில் சர்க்காருக்குள்ள அதிகாரங்களை வேறு ஒரு அதிகாரி செய்யும்படி மாற்றச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

(25—1—1950 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் IV B பக்கம் 51)

ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத் திருத்தம்

(சென்னை 1948-ஆம் வருடத்திய 26 ஆவது சட்டமாகிய ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் இச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டிருக்கின்றன. இத்திருத்தச் சட்டம் சென்னை 1950 ஆம் வருடத்திய 1-ஆவது சட்டம். 23-1-1950-ல் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் அங்கீகாரம் பெற்றுள்ளது.)

திருத்தங்களின் விபரம்: (1) ஜமீன் அல்லது இனும் கிராமம் திறப்பாக மாற்றப் பட்டால் மேல் வாரத்தை இழக்கும் ஜமீன் தாருக்கும் இனும்தாருக்கும், அல்லது மேல் வாரம் அடையும் பாத்தியமுள்ள கோவில் அல்லது கல்வி, தர்ம ஸ்தாபனங்களுக்கும் நஷ்டஈடு கொடுக்கும் விஷயமாய் நஷ்டஈடு எவ்விதம் எவ்வளவு தடவைகளாகக் கொடுக்கப்படுமென்று சர்க்கார் விதிகள் செய்யலாமென்றும் அந்த விதிகளைச் சென்னை சட்டசபை (கீழ் சபை) மட்டில் அங்கீகரிக்க வேண்டுமென்றும் செக்ஷன் 40 இருந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் திருத்தப்படி இந்த விதிகள் சென்னை சட்டசபைகள் இரண்டின் அங்கீகாரமும் பெறவேண்டுமென்று திருத்தப் பட்டிருக்கிறது. ஆனால் இத்திருத்தச் சட்டத்திற்கு முன் ஏற்பட்ட விதிகளை இத் திருத்தம் பாதிக்காது. (அதாவது ஏற்கனவே ஏற்பட்ட விதிகள் சென்னை கீழ் சட்டசபையின் அங்கீகாரம் மட்டில் பெற்றிருந்தாலும் அவை செல்லும்.)

(2) புதிதாக, செக்ஷன் 54 A என்று ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி (கோவில் முதலிய ஸ்தாபனங்களைத் தவிர மற்ற) ஜமீன் இனும்தார்களுக்குக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை சர்க்கார் தோராயமாகக் கணக்குச் செய்து அதில் ஒரு பாதித் தொகையை விளம்பரத் தேதியிலிருந்து ஆறுமாதத்திற்குள் டிரிபுனல் ஆபீசில் கட்டிவிடவேண்டும். இதற்கு முன்பே விளம்பரம் செய்யப்பட்ட கிராமங்களுக்கு 30-6-1950-க்குள் சர்க்கார் மேற்கண்ட தொகையைக் கட்டி விடவேண்டும். சர்க்காருக்குச் சேரவேண்டிய பேஷ்குஷ் முதலிய தொகைகளில் சரிபாதியை மட்டில் கழித்துக்கொண்டு பாக்கியைக் கட்டவேண்டும். ஏற்கனவே ஏதாவது வருடாந்திரத் தொகைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதிலும் பாதியைக் கழித்துக்கொள்ளலாம். இவ்விதம் சர்க்காரால் கட்டப்படும் நஷ்டத் தொகையின் சரிபாதியை, பாத்தியமுள்ளவர்களுக்கு டிரிபுனல் பிரித்துக்கொடுக்கலாம். இத்தொகைகளைக் கழித்துக் கொண்டு முடிவாகப் பாக்கி ஏற்படும் நஷ்டஈட்டுத் தொகைகளைச் சர்க்கார் கொடுக்க வேண்டும். சரிபாதி கட்டிவிட்ட பிறகு வருடாவருடம் கொடுக்கவேண்டிய தொகையில் பாதிதான் சர்க்கார் கொடுத்து வருவார்கள்.

(3) ஜமீன்தாரி கிராமங்கள் சம்பந்தப் பட்ட வரையில் ஒரு சலுகை காண்பிக்கப் பட்டிருக்கிறது. சென்னை மாகாணத்தி லுள்ள எல்லா ஜமீன் கிராமங்களுக்கும் சேர்த்துக் கொடுக்கப்படும் நஷ்டஈடு 12½ கோடி ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் அப்படி குறைவாக இருக்கும் தொகையையும் மறுபடியும் அந்தந்த ஜமீன்தார்களுக்கு வீதாசாரமாய் பிரித்துக் கொடுக்கும்படி புதிதாக செக்ஷன் 54 B என்று ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில வாசகத் திருத்தங்களும் செய்யப்பட்டிருக் கின்றன.

(25-1-1950 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் IV B பக்கம் 57)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 187695 சென்னை-600 008

ஷோலாப்பூர் நெசவு ஆலையை மத்ய சர்க்காரே நடத்த அவசரச் சட்டம்

(1950 ஆம் வருடத்திய 2வது மத்திய அவசரச் சட்டம்.)

பம்பாய் மாகாணத்தில் ஷோலாப்பூர் மில்ஸ் என்பது ஒரு பெரிய நெசவு ஆலை. நூல் நூற்பது, நெசவு இரண்டும் உள்ளது. ஷோலாப்பூர் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனியின் ஆலைகள் இக்கம்பெனியின் நிர்வாகிகளின் (டைரெக்டர்களின்) ஊழலினாலும் அசட்டையினாலும் ஆலைகள் வேலை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனால் தேசத்திற்கே இரண்டுவித கெடுதிகள் நேரிட்டன. மிக அத்தியாவசியமான ஜவுளிகளின் உற்பத்தி நின்று விட்டது. அந்த ஆலைகளில் வேலை செய்து வந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. ஆகையால் சட்டசபைகள் கூடாமலிருந்த காரணத்தினால், மே. த. கவர்னர் ஜெனரல் அவர்களால் 9—1—1950ல் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இக்கம்பெனியின் நிர்வாகத்தை மத்ய சர்க்காரே எடுத்துக் கொள்வார்கள். பழைய டைரக்டர்களை நீக்கி, சர்க்காரே புதிய டைரக்டர்களை நியமிப்பார்கள். ஏற்கனவே உள்ள நிர்வாக ஏஜண்டும் பதவி இழப்பார். ஆலைகளை நடத்தும் விஷயத்தில் சர்க்காரால் நியமிக்கப்படும் டைரெக்டர்களுக்கு ஏராள அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய டைரக்டர்களும் சரிவர கணக்கு ஒப்புவிக்கவேண்டும். கம்பெனியின் சொத்துக்களையும் தஸ்தாவேஜிகளையும் சர்க்கார் டைரெக்டர்களிடம் ஒப்படைத்துவிடவேண்டும். இவர்களுக்கு இன்னும் பல கடமைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் செய்யாவிட்டால் குற்றமாகும். ஆறுமாதம் வரை சிறைத் தண்டனையும் ரூபாய் ஆயிரம் வரை அபராதமும் விதிக்கப்படலாம். இன்னும் நிர்வாகம் சம்பந்தமான பல ஷரத்துக்களும் இவ்வவசரச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன.

(24—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் III B பக்கம் 247)

மின்சார விநியோகத்தைச் சர்க்காரே எடுத்து நடத்தச் சட்டம்

(1949-ஆம் வருடத்திய சென்னை 43-வது சட்டம்) இம்மாகாணத்தில் இப்பொழுது மின்சார விநியோகம் (Electric Supply) பல கம்பெனிகளாலும் முனிசிபாலிடி முதலிய சில ஸ்தல ஸ்தாபனங்களாலும் நடத்தப்பட்டு வருகிறது. பொது மக்களின் நன்மையையும் லாபத்தையும் உத்தேசித்து, இவர்களுக்குக் கொடுத்திருக்கும் லைசென்சுகளை உடனேயே ரத்து செய்து சர்க்காரே ஒவ்வொரு இடத்திலும் நேரடியாகவே மின்சார விநியோகம் செய்ய இச்சட்டம் இடமளிக்கின்றது. சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும் கம்பெனி முதலியவைகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படும். நஷ்ட ஈடு கொடுக்கும் முறையைப்பற்றிப் பல விதிகள் இருக்கின்றன.

(24—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IV B பக்கம் 22)

வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட்டிலும் பல மாகாணங்களிலுள்ள ஹைகோர்ட்டு களிலும் சமீபத்தில் நடந்த வழக்குகளில் உயர் நீதிபதிகளால் அளிக்கப்பட்ட சில தீர்ப்புக் களின் முக்கிய அம்சங்களை நமது நேயர்கள் வாசிக்கலாம். அடிப்படையான சட்ட தத்து வங்களை விளக்கும் இங்கிலாந்திலுள்ள நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் இங்கே காணலாம். தொழிற்சாலைகள் சட்டம், ஷாப் சட்டம் இவைகளின்படி முடிவான தீர்ப் பளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் தீர்ப்புகளும் சேர்க்கப்படும்.]

ரயில் பிரயாணியின் வளையல் மூட்டையைக் கீழே தள்ளிய ரயில்வே அதிகாரி

கோர்ட் : சென்னை ஹைகோர்ட்

நீதிபதி : கனம் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்

ஆதாரம் : 1950 II மதராஸ் லா ஜர்னல் 82

ரயிலில் பிரயாணம் செய்யும் ஒருவர் குடி மயக்கத்திலிருந்தாலும், தொல்லை உண்டாக் கிக்கொண்டிருந்தாலும், வெட்கக் கேடாக நடந்து கொண்டாலும், ஆபாசமாகத் துர் பாஷை உபயோகப்படுத்தினாலும், அல்லது வேண்டுமென்று, காரணம் ஒன்றுமில்லாமல், வேறு ஒரு பிரயாணியின் வசதிக்குக்கேடு செய்தாலும், விளக்கை அணைத்தாலும் ரயில்வே சட்டம் 120-ஆவது செக்ஷன்படி அது ஒரு குற்றமாகும். ரூபாய் ஐம்பது வரை அபராதம் விதிக்கப்படலாம். அத் துடன் ரயில்வே அதிகாரியால் ரயிலை விட்டுக் கீழே இறக்கி விடப்பட்டு, அவர் வாங்கிய டிக்கட் அல்லது பாசும் பறிமுதல் செய்யப்படலாம். இதுதான் சட்டம்.

பிரஸ்தாப வழக்கில் ஒரு வளையல்காரர் வளைகள் அடங்கிய மூட்டையுடன் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அதே வண்டியில் இருந்த ஒரு ரயில்வே அதிகாரி, அந்த வளையல் மூட்டையைக் கீழே தள்ளி வளையல்களை நொறுக்கினார். இச்செய்கைக்காக அந்த ரயில்வே அதிகாரி பேரில் (கம்ப்ளெயின்ட்) பிராது கொடுக் கப்பட்டு மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப் பட்டார். அந்த ரயில்வே அதிகாரி ஹை கோர்ட்டுக்குத் தம்பேரில் ஏற்பட்ட தண் டனையை ரத்து செய்யவேண்டுமென்று ரிவி ஷன் மனுக்கொடுத்தார். அவர் தாம் ரயில்வே உத்தியோகஸ்தராகையால் இச் சட்டம் தன்னைக்கட்டுப்படுத்தாதென்றும், இது ரயிலில் பிரயாணம் செய்யும் மற்றப் பிரயாணிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட தென்றும் வாதாடினார். அவருடைய கட்சியை நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ரயில்வே அதிகாரி என்ற ஹோதா வில் இக்காரியம் செய்யப்படவில்லை என் றும், ரயில் உத்தியோகஸ்தர் என்ற முறை யில் இது செய்யக்கூடிய காரியமும் இல்லை என்றும் மற்றப் பிரயாணிகளைப் போலவே இந்த ரயில்வே அதிகாரியும் தன் நடத் தைக்காகத் தண்டிக்கப்பட்டது சரியே என்றும் நீதிபதி அபிப்பிராயப்பட்டு மனு வைத் தள்ளிவிட்டார்.

வேண்டுமென்று பொய்யாக மனைவியை விபசாரி என்று சொல்லிய கணவன் ஜீவனம்சம் கொடுக்க நேரிட்டது.

கோர்ட் : சென்னை ஹைகோர்ட்

நீதிபதி : கனம் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள்.

ஆதாரம் : 63 லா வீக்லி—பக்கம் 66.

மனைவி தன் புருடனுடன் வசிக்க வேண்டியது தான் அவள் கடமை. மனைவி யைச் சம்ரட்சிக்க வேண்டியது புருடனு

டைய கடமை. புருடனுடன் வசிக்காமல் தனியேபோய் இருந்துகொண்டு தன்னைப் புருடன் சம்ரட்சிக்க வேண்டுமென்றும் அதற்காகப் பணம் வேண்டுமென்றும் கேட்க, சாதாரணமாய் மனைவிக்குப் பாத்தியமில்லை. இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் புருடனுடன் வசிப்பது முடியாத காரியமாகப் போய்விடலாம். அப்பொழுது புருடனுடன் இல்லாமல் மனைவி தனியாக வசித்து வந்தாலும், தனக்கு, புருடன் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்று கேட்க உரிமை உண்டாகி விடுகின்றது. ஒரு ஹிந்து ஸ்திரீ எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் புருடனுடன் வசிக்காமல் தனியேபோய் ஜீவனாம்சம் கேட்கலாமென்று (1946 ஆம் வருடத்திய 19 ஆவது மத்ய) சட்டத்தில் இருக்கின்றது. அதாவது (1) தன்னிடமிருந்து பரவாத ஆபாச வியாதியால் புருடன் பீடிக்கப் பட்டிருந்தாலும் (2) புருடனுடன் வசிப்பது அபாயம் அல்லது, உசிதமல்ல, என்று ஏற்படக்கூடிய விதம் புருடன் மனைவியிடம் குரூரமாய் நடந்து கொண்டாலும் (3) அவளை அனாதரவு செய்தாலும் (4) புருடன் வேறு ஒரு மனைவியை மணம் செய்துகொண்டிருந்தாலும் (5) புருடன் வேறு மதத்திற்குப் போனாலும் (6) வீட்டிலேயே ஒரு வைப்புடன் புருடன் வசித்தாலும் அல்லது அந்த வைப்புடனேயே எப்பொழுதும் வசித்து வந்தாலும் (7) வேறு யுக்தமான காரணங்களிருந்தாலும் மனைவி தனிமையில் வசித்துப் புருடனிடம் ஜீவனாம்சமும் வாங்கலாம். ஆனால் மனைவி விபசாரியாக இருந்தால் இந்தப் பாத்தியங்களை இழப்பாள்.

பிரஸ்தாப வழக்கில் புருடன் வேண்டுமென்று பொய்யாக மனைவியை விபசாரி என்று குற்றம் சாட்டினார். இவ்விதம் குற்றம் சாட்டப்பட்டவுடன் மனைவி தனிமையாகப் போய், புருடனிடம் ஜீவனாம்சம் கேட்டாள். மனைவி தனியாக வசிக்கப் பாத்தியமில்லை என்றும் தான் அவளிடம் குரூரமாக நடந்து கொள்ளவில்லை என்றும் ஆகையால் அவள் தனியேபோய் வசிக்கப் பாத்தியமில்லை என்றும் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவரல்ல என்றும் புருடன் கக்ஷி சொன்னார். இக்கக்ஷியை நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வேண்டுமென்று பொய்யாக மனைவியை விபசாரி என்று சொல்வது ஒரு குரூரமான நடத்தை என்றும் இவ்விதம் பொய்யாகக் குற்றம் சாற்றப்பட்டவுடன் அவள் தனிமையாக வசிக்கச் சட்டத்தில் அவளுக்கு உரிமை உண்டாகி விடுமென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இரண்டாயிரத்து இரு நூறு வருடங்களுக்கு முன் மௌரிய சக்கரவர்த்திகள் ஆட்சி புரிந்த காலத்தில் எழுதப்பட்ட 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலில் இவ்விதம் புருடன் சொல்வது குரூரத்தனமாகுமென்று சொல்லப்பட்டிருப்பதாயும் நம் நாட்டில் மனைவியுடன் புருடன் சண்டையிட்டு இரண்டொரு தட்டுத்தட்டி விட்டால் அது ஒன்றும் பெரிய விஷயமாகப் பாவிக்கப் படாவிட்டாலும் மனைவியை விபசாரி என்று பொய்யாகச் சொல்வதுதான் குரூரச் செய்கையாகக் கருதப்பட்டு வந்திருக்கிறதென்றும் விளக்கம் செய்து, மனைவிக்குப் புருடன் ஜீவனாம்சம் கொடுக்கும்படி நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தார்கள்.

குழந்தைகள் விளையாடியது பிரிவி கவுன்சில் வரை போயிற்று

கோர்ட்: பிரிவி கவுன்சில்
நீதிபதிகள்: வைகவுண்ட் ஸைமன் இன்னும் மூன்று நீதிபதிகள்
ஆதாரம்: 1949-(2) மதராஸ் லா ஜர்னல் 488

குழந்தைகளின் விளையாட்டினால் ஏற்பட்ட வழக்குத்தான். இருந்தாலும் படிப்படியாய், பல கோர்ட்டுகளைப்பார்த்து, கடைசியில் லண்டனிலுள்ள பிரிவிகவுன்சில் போய்த்தான் இதில் ஏற்பட்ட சட்டப் பிரச்னைகள் தீர்ந்தன.

வில்லியம் என்ற ஒன்பது வயதுள்ள கனடா தேசச் சிறுவன் ஒரு நாள் சாயங்காலம் ஏழு வயதுள்ள தன் தம்பியையும்

கூட அழைத்துக்கொண்டு, ஒரு மோட்டார் எண்ணெய் விற்கும் கம்பெனிக்குப் போய், கடைக்காரரிடம் 5 செண்டு பணம் கொடுத்து, காஸோலைன் என்ற மோட்டார் எண்ணெய் கொடுக்கும்படி கேட்டான். காஸோலைன் என்றது ஒரு அபாயகரமான எண்ணெய். கொஞ்சம் சூடு கண்டவுடன் ஒரேயடியாக நெருப்பு பற்றிக்கொண்டு எரியும் தன்மை உள்ளது. அதை வாங்குபவர்கள் அதை வெகு ஜாக்கிரதையாகவும் நெருப்புப் பொறி அணுகாமலும் வைத்துக் கொள்ளவேண்டும். கடையிலிருந்த சிப்பந்தி 'எதற்காக உனக்கு இந்த எண்ணெய்' என்று கேட்டான். தன் தாயாருடைய மோட்டார் சமீபத்தில் நடு ரோடில் நின்றுவிட்டதாயும் அதற்காக உபயோகப்படுத்தவே தன் தாயார் அந்த எண்ணெயை வாங்கிவரச் சொன்னாளென்றும் அச்சிறுவன் பதில் சொன்னான். கடைக்காரன் காசை வாங்கிக்கொண்டு சிறுவன் கொண்டு வந்த பாத்திரத்தில் காஸோலைன் எண்ணெயைக் கொடுத்தான்.

எண்ணெய் வாங்கி வந்த சிறுவன் சொன்னது பொய். அவனுடைய தாயாரின் மோட்டார்காருக்காக அவன் எண்ணெய் வாங்கவில்லை. அவள் வீட்டில் தேக அசௌக்கியமாகப் படுத்த படுக்கையில் இருந்தாள். குழந்தைகளிடம் மிட்டாய் வாங்கித் தின்னும்படி கொடுத்த காசுதான் ஐந்து செண்டு பணம். இச்சிறுவர்கள் முதல் நாள் ஒரு சினிமா படம் பார்த்தார்கள். அதில் நெருப்புப் பந்தங்களை வைத்து, கூத்தாடிய காட்சி ஒன்று அவர்களுடைய மனதைக் கவர்ந்தது. தாங்களும் அவ்விதம் நெருப்புத் தீவட்டிகளுடன் விளையாட இக்குழந்தைகள் ஏற்பாடு செய்தனர். அதற்காகத் தீவட்டி கொளுத்தவே இந்தக் காஸோலைன் எண்ணெயை வாங்கி வந்தனர். எண்ணெயை எடுத்துக்கொண்டு ஒரு சந்தில் நின்று கொண்டு ஒரு குச்சியில் பந்தம் கட்டி, எண்ணெயில் தோய்த்து ஒரு குழந்தை தீவட்டியைக் கையில் வைத்துக் கொண்டு மற்றக் குழந்தை நெருப்புக் குச்சியைக் கிழித்து வைத்தவுடன் அத் தீவட்டியும் பக்கத்தில் இருந்த பாக்கி காஸோலைன் எண்ணெயும் குபீரென்று பற்றிக்கொண்டது. அத்துடன் ஒரு சிறுவனுடைய ஆடைகளிலும் நெருப்புப் பிடித்துக்கொண்டது. உடம்பு வெந்துவிட்டது. ஆனால் உயிர் போகவில்லை. சிறுவன் பிழைத்துக் கொண்டான்.

சிறுவனின் தகப்பன் தம்முடைய குழந்தைக்கு நேர்ந்த விபத்திற்கு எண்ணெய் விற்ற வியாபாரிதான் ஜவாப்தாரி என்றும் அக்கடையின் சிப்பந்தி ஒரு அபாயகரமான எண்ணெயை ஒரு சிறுவனிடம் கொடுத்தது அஜாக்கிரதையான நடத்தை என்றும், எந்தப் புத்தியுள்ள மனிதனும் இவ்விதம் செய்வது குழந்தைக்கு மோசம் நேரிடக் கூடியதென்று எதிர்பார்த்திருப்பான் என்றும், சிப்பந்தியின் அசட்டைக்காக முதலாளி கம்பெனி பேரில் நஷ்ட ஈடு கிடைக்கத் தாவா செய்தான். அதற்கு எண்ணெய் விற்ற கம்பெனியார் இரண்டு கட்சிகள் சொன்னார்கள். (1) சிறுவனுக்கு விபத்து நேர்ந்தது எண்ணெய் விற்றதால் அல்ல. எண்ணெயை எடுத்துப்போய், சிறுவர்கள் விளையாடியதால் ஏற்பட்டது. அவர்கள் இவ்விதம் விளையாடியதற்கு நாங்கள் எப்படி பொறுப்பாளி என்று ஒரு கட்சி (2) கம்பெனியின் அசட்டையால் மட்டில் இவ் விபத்து ஏற்படவில்லை. சிறுவனுக்கு எண்ணெய் கொடுக்கும்படி செய்தது அச்சிறுவன் சொன்ன பொய்யினால்தான். அப் பையன் ஏதோ தன்னுடைய தாயாரின் மோட்டார் நடு வழியில் ஓடாமல் நின்றுவிட்டதென்று சொன்னபடியாலல்லவா எண்ணெய் கொடுக்கப்பட்டது. ஆகையால் அச்சிறுவனுடைய நடத்தையும் சேர்ந்து தான் இவ்விபத்திற்குக் காரணம் என்றும் அதற்குத் தகுந்ததுபோல், குறைவான நஷ்ட ஈடுதான் தங்களிடம் வசூல் செய்யலாமென்பது இரண்டாவது கட்சி.

கனடா தேசத்திய சுப்ரீம் கோர்ட், முதல் கக்ஷியை கேட்கவில்லை. ஆனால் இரண்டாவது கக்ஷியை ஏற்று, கொஞ்சமாக நஷ்ட ஈடு கொடுத்தார்கள். அதன் பேரில் ஏற்பட்ட பிரிவிகவுன்சில் அப்பீலில் எண்ணெய் விற்ற கம்பெனியின் இரண்டு கக்ஷிகளும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: (L 2479 பாரதி, நாகப்பட்டினம்) நகை ஈட்டின் மேல் பணம் கொடுக்கும் வட்டிக் கடையில் (வட்டிச் சட்டம் வருவதற்கு முன்) ஒரு திருட்டு நகை என்று அறியாமல் அதன் மேல் பணம் கொடுத்து, பிறகு போலீசார் அந்த நகையை பெற்றுக்கொண்டு சென்றால், அந்த நகையின் மேல் கொடுத்த தொகை நஷ்டமாகப் போனதுதானா? கஷ்டப்பட்டால் கிடைக்குமா?

பதில்: ஈடு வைத்தது செல்லாதே ஒழிய, கடன் வாங்கியவர் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டவர்தான். காலாவதியாகாமலிருந்து தொகை வசூல் செய்ய வேறு வழி இருந்தால், கடன் வாங்கியவர்மீது கடன் திரும்பக் கிடைக்க வேண்டுமென்று தாவா செய்யலாம்.

கேள்வி: (L 2481 கோவிந்தசாமி, ஆம்பூர்) ஒருவருக்கு மனைவி, மகன் இருக்கிறார்கள். அவருக்கு ஒரு வைப்பும், அவள் மூலம் ஒரு மகனும் இருக்கிறார்கள். பூர்வீகச் சொத்தும், சுயார்ஜித சொத்தும் இருக்கின்றன. மனைவியின் மகனுக்கும், வைப்பாட்டியின் மகனுக்கும் சொத்தில் சம உரிமை உண்டா?

பதில்: தகப்பன் மனைவியின் மகனையும், வைப்பின் மகனையும் சம்ரக்ஷித்துவரக் கடமைப்பட்டிருக்கிறார். இவ்விஷயத்தில் இருவகை மகன்களுக்கும் வித்தியாசம் கிடையாது. சம்ரக்ஷணை செய்யாத தகப்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எண்ணெயை விற்ற கம்பெனியின் அஜாக்கிரதையான நடத்தையால் மட்டில் இவ்விபத்து ஏற்பட்டது. அச்சிறுகுழந்தைக்கு அந்த எண்ணெய் அபாயகரமானதென்று தெரிந்திருக்க முடியாதென்றும், அக்குழந்தைக்கு அனுபவம் இருந்திருக்க முடியாதென்றும், விஷமம் செய்வது குழந்தைகளுக்கு இயற்கை என்றும் கம்பெனியின் சிப்பந்தி உணர்ந்திருக்க வேண்டும். யோசியாமல், அசட்டையாக, எண்ணெயைக் கொடுத்ததே அவ்விபத்தின் ஒரே காரணமென்று தீர்மானித்து குழந்தைக்காக எண்ணாயிரம் டாலர்களும், தகப்பனுக்கு இரண்டாயிரச் சொச்ச டாலர்களும் செலவு தொகைகளும் கம்பெனியார் கொடுக்கும்படி பிரிவிகவுன்சில் தீர்ப்பளித்தனர்.

(குறிப்பு: தீபாவளி சமயத்தில் அபாயகரமான வெடிகளைக் குழந்தைகளுக்கு விற்பனை செய்பவர்கள் அதற்கு முன் இவ்வழக்கை மறுமுறை படித்துக்கொள்ளலாம்.)

பன் மீது ஜீவனும்சம் வாங்க இருவகை மகன்களுக்கும் உரிமை உண்டு. தகப்பன் உயிருடன் இருக்கும்போது அவருடைய சுயார்ஜிதச் சொத்தில் இருவகை மகன்களுக்கும் யாதொரு பாத்தியமும் கிடையாது. ஆனால், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்டவரையில் வித்தியாசம் உண்டு. தகப்பனிடமிருக்கும் பூர்வீகச் சொத்தில் தனக்குள்ள பாகத்தைப் பிரித்துக்கொடுக்கும்படி, தகப்பன் உயிருடன் இருக்கும்போதே மனைவியின் மகன் கேட்கலாம்; வைப்பின் மகன் கேட்கமுடியாது.

கேள்வி: (L 2489 திருமலைசாமி, ரெட்டியாரூர்) கிராமங்களிலிருந்து சொந்த வண்டியில் சமீபத்திலுள்ள முனிசிபல் டவுனுக்குள் போய்த் திரும்பிவர வண்டிகளுக்கு லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டுமா?

பதில்: ஒரு அரை வருஷத்தில் 15-நாட்களுக்குக் குறைவாக வண்டிகள் முனிசிபாலிடி எல்லைக்குள் வைக்கப்பட்டிருந்தால் லைசென்ஸ் கட்டவேண்டியதில்லை. (செக்ஷன் 99, டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்ட்) எந்த வண்டியிலாவது வெளியூர்களிலிருந்து முனிஸிபாலிடி எல்லைக்குள் வியாபாரத்திற்காகச் சாமான்கள் கொண்டுவந்தால் மேற்படி வண்டிகளுக்கும் முனிஸிபாலிடிக்கு வரும் தினம் கட்டணம் செலுத்தவேண்டும். (டிஸ்டிரிக்ட் முனிசிபல் ஆக்ட் செக்ஷன் 279 A). ஒரு உற்சவம் அல்லது விழாக் காலங்களில் எந்த வண்டி முனிசிபல் எல்லைக்குள் வந்தாலும் சர்க்கார் அனுமதியின்பேரில் கட்டணம் வசூலிக்கலாம்.

கேள்வி: (L 2490 நல்லசாமி கவுண்டர், பரமத்தி) பூர்வீகச் சொத்துக்களை (ஹிந்து) சகோதரர்கள் பாகப் பிரிவினை செய்துகொண்டபிறகு ஒருவர், (யாதொரு செட்டில்மெண்ட் முதலிய தஸ்தவேஜி ஒன்றும் எழுதிவைக்காமல்) இறந்து அவருக்கு மனையும், ஒரு மகளும் இருந்தால் அவருடைய சொத்துக்களை அனுபவித்து வரும் மனைவியும், மகளும் அச்சொத்தைக் கிரயம் செய்தால் செல்லுமா? இறந்தவருடைய சகோதரருக்கு என்ன பாத்தியம்?

பதில்: சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடிய அவசியமான காரணங்கள் இருந்து, அந்த அவசியத்திற்குப் போதுமான சொத்துக்களை மனைவி விற்றால் செல்லும். அப்படி யாதொரு காரணங்களும் இல்லாமல் இவர்கள் விற்றாலும், மனைவியும், மகளும் உயிருடன் இருக்கும் வரை கிரயம் வாங்கியவர் கிரய சொத்துக்களை அனுபவிக்கலாம். மனைவியும், மகளும் உயிருடன் இருக்கும் வரை, இறந்தவருடைய சகோதரருக்கு யாதொரு பாத்தியமுமில்லை. இவ்விருவர்களுடைய ஆயுசுக்குப் பிறகு (மகளுக்கு மகனில்லாமல்), அச்சகோதரர் உயிருடன் இருந்தால் சொத்தை அடைவார்.

கேள்வி: (L 2491 பெருமாள் சேர்வை, நிலக்கோட்டை) ரிஜிஸ்டர் கலியாணத்திற்கு (அதற்கான சட்டப்படி செய்யாமல்) ரூ. 1—8—0 ஸ்டாம்பில் கலியாண ஒப்பந்தப் பத்திரம் என்று எழுதி ரிஜிஸ்டர் செய்தால் செல்லுமா? ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்வார்களா? 21 வயதுள்ள ஆண் தனக்கு மேல் வயதுள்ள பெண்ணைக் கலியாணம் செய்யலாமா? கலியாண ஒப்பந்தப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்த பிற்பாடு ஆணாவது, பெண்ணாவது பத்திரத்தை ரத்து செய்யலாமா? கலியாணம் ஆகாமல் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு இருப்பவளை ரிஜிஸ்டர் கலியாணம் செய்யலாமா?

பதில்: மணம் செய்துகொள்ளும் விஷயத்தில் தங்களுடைய முற்போக்கான எண்ணங்களுக்கேற்றவாறு இன்னும் சட்டங்கள் வரவில்லை. கிரய பத்திரங்களைப்போல் 'கலியாண ஒப்பந்தப் பத்திரம்' எழுதிக் கொள்வதின் மூலம் இப்பொழுது இருக்கும் சட்டப்படி கலியாணம் செய்துகொள்ள முடியாது. 'ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட்' என்ற விசேஷ விவாகச் சட்டத்தின்படி அச்சட்டத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் ரிஜிஸ்டிரார் முன் தம்பதிகள் 'ரிஜிஸ்டர்' (பதிவு) செய்துகொள்ளவேண்டும். அது தான் 'ரிஜிஸ்டர்' கலியாணம் என்பது. கிரய பத்திரங்களையும், வாடகைப் பத்திரங்களையும் ரிஜிஸ்டர் செய்யும் சப் ரிஜிஸ்ட்டிராருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. எந்தப்

பத்திரங்களையும் ரிஜிஸ்டர் செய்யக் கடமைப்பட்ட சப் ரிஜிஸ்ட்டிரார் தாங்கள் பிரஸ்தாபிக்கும் கலியாண ஒப்பந்தத்தையும் ரிஜிஸ்டர் செய்யலாம். ஆனால், அது பிரயோஜனமில்லை. இவ்விதப் பத்திரங்களைப் பிறகு ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், ஆரம்பத்திலேயே இவை செல்லமாட்டா. வயது அதிகமுள்ள பெண்ணைக் கலியாணம் செய்துகொள்வது தம்பதிகளின் இஷ்டம். குழந்தை உள்ள பெண்ணையும் ரிஜிஸ்டர் கலியாணம் செய்துகொள்ளலாம். அக் குழந்தை சட்டப்படி அவருடைய குழந்தை ஆகாது.

கேள்வி: (L 2501 முத்துசாமி செட்டி, அம்பாசமுத்திரம்) விவாகமாகி 6 மாதத்திற்குப் பிறகு மனைவி புத்தி சுவாதீனமில்லாமல் போய் ஒன்றரை வருடமாகச் சிகிச்சை செய்து குணமடையாமல் இருக்கும் நிலைமையில் கணவன் மறு விவாகம் செய்துகொள்ள (இப்போதுள்ள சட்டப்படி) என்ன வழி?

பதில்: மறு விவாகம் செய்துகொள்ள இப்பொழுது முடியாது. மனைவிக்குச் சிகிச்சைகள் செய்தும், தீராது என்ற பைத்தியமாக, தொடர்ச்சியாக, ஐந்து வருடங்கள் ஆனபிறகு விவாக ரத்து செய்துகொண்டு, பிறகுதான் மறு விவாகம் செய்துகொள்ள முடியும்.

கேள்வி: (L 2504 குருசுவாமிகள், பாதரக்குடி) ஒரு ஸ்திரீ, சில மஞ்சட்காணிச் சொத்துக்களை வைத்து இறந்துவிட்டாள். புருடனும் இல்லை. சந்ததியும் இல்லை. அவளுக்கு அண்ணன் மகனும், தம்பியும் இருக்கிறார்கள். அவளுடைய சொத்துக்கு யார் வார்சு?

பதில்: இருவருக்குள் தம்பிதான் நெருங்கிய வார்சு.

கேள்வி: (L 2507 உமர், ஆனைமலை) மேஜரான மகனுக்கு உரிமை உள்ள சொத்தைத் தகப்பன் அனுபவிக்க முடியுமா?

பதில்: தகப்பனுக்கும் அதில் பாத்தியம் இல்லாவிட்டால், சட்டப்படி அனுபவிக்க முடியாது.

கேள்வி: (L 2510 முகமது மீரா, விஜயபுரம்) ஷாப் இன்ஸ்பெக்டர் ஷாப் சட்டப்படிக்குள்ள சம்பள ரிஜிஸ்டர்களைத் தவிர கடையின் மற்றக் குறிப்புப் புத்தகங்களைப் பார்க்க உரிமை உண்டா?

பதில்: ஷாப் சட்டப்படி வைத்துக்கொள்ள வேண்டிய எல்லா ரிஜிஸ்டர்களையும், தஸ்தவேஜிகளையும், நோட்டீஸ்களையும் தான் பார்வையிட ஷாப் இன்ஸ்பெக்டருக்கு (ஷாப் சட்டம் 43-ஆவது செக்ஷன்படி) உரிமை உண்டு. மற்றவைகளைப் பார்க்க முடியாது.

கேள்வி: (L 2516 மாரிமுத்து முதலியார், மேட்டுப்பாளையம்) ஒரு வீடு, தாய், மூன்று மகன்களுக்கும் கிரயம். அதைத் தாயும், மேஜர் ஆன மூத்த மகனும் விற்றால் செல்லுமா? மற்ற மகன்கள் மைனர்கள்.

பதில்: மைனர்களின் பாகம் சாதாரணமாய் கட்டுப்படாது. ஆனால், மைனர்களுடைய அத்தியாவசியமான செலவுகளுக்காக விற்றால் செல்லும். மைனருடைய சொத்துக்களை அவருடைய கார்டியன்தான் இவ்விதம் விற்கலாம்.

கேள்வி: (L 2525 ராமசாமி, பொள்ளாச்சி) ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுப்பவர், சட்டப்படி நகை ஈட்டின் பேரில் கடன் வாங்குபவர் சம்மதத்தின் பேரில் அதிக வட்டி வாங்கலாமா? அப்படி வாங்கினால் அது குற்றமாகுமா? அல்லது கோர்ட்டுக்குப் போனால் அதிக வட்டியைத் தள்ளுபடி செய்துவிடுவார்கள் என்பதுமட்டுமா?

பதில்: சம்மதமிருந்தாலும் அதிக வட்டி வாங்கமுடியாது. அப்படி வாங்குவது குற்றமாகும். கோர்ட்டுக்குப் போனாலும் அதிக வட்டி தள்ளுபடியாகும்.

கேள்வி: (L 2527 சாமிநாத செட்டியார், புதுவயல்) இனம் ஒழிப்பு, சட்ட சபையில் பாசாகவில்லை என ஞாபகமிருக்கிறதே. ஆனால், சில பகுதிகளில் இனம் சொத்துக்களையும் சர்க்கார் நிர்வாகத்துக்கு

எடுத்துக்கொண்டுவிடுவதாகத் தெரிகிறதே. அதன் விபரம் என்ன?

பதில்: இது சட்ட சம்பந்தமான பிரச்னை அல்ல. தங்கள் ஞாபகசக்தியைப் பொறுத்த பிரச்னை. இருந்தாலும் விதி விலக்காகப் பதில் சொல்லுகிறோம். இப்பொழுது சென்னை சட்டசபையால் 'பாசாகி' இருக்கும் சட்டப்படி எல்லா ஜமீன்களும் சில வகை இனும்களும் ஒழிக்கப்படும். ஒரு குறிப்பிட்ட இனும் கிராமம் இச்சட்டப்படி ஒழிக்கப்பட வேண்டியதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இனும் செட்டில்மெண்ட் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்திவருகின்றனர். அவர்களுடைய தீர்மானத்தின் பேரில் 'டிரிபுனல்' என்ற விசேஷ கோர்ட்டுக்கு அப்பீல் அதிகாரமுண்டு.

கேள்வி: (ஷை) சென்னை பான் புரோகர்ஸ் ஆக்ட்படி லைசென்சு வாங்கிக்கொண்டு செய்யவேண்டுமென்பது நகை, வெள்ளிச் சாமான்களுக்கு மட்டுமா? அல்லது தானிய வகைகள், பட்டு நூல் மற்ற இதர சாமான்களை ஈடு வாங்குவதற்குமா?

பதில்: எவ்விதமான ஜங்கம சொத்தின் பேரில் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கவும் அத்தொழில் நடத்துவர்கள் லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும்.

கேள்வி: (L2529 கிருஷ்ணன் பிள்ளை, கன்னிவாடி) பாகமாகாத இரண்டு சகோதரர்களில் தம்பிக்கு மனைவியும் ஒரு மகனும் இருக்கிறார்கள். மனைவியும் மகனும் கவனிக்கப்படாமல் அனாதரவு செய்யப்பட்டு அவர்கள் மனைவியின் தாய் வீட்டிலேயே இருக்கிறார்கள். மனைவிக்கும் மகனுக்கும் சாப்பாட்டிற்கும் மகன் படிப்பிற்கும் செலவுக்குப் பணம் கேட்க முடியுமா? இவர்களை ஏமாற்ற இரண்டு சகோதரர்களும் சேர்ந்து சொத்துக்களைப்பராதீனப்படுத்த முடியுமா?

பதில்: மனைவி மகன் இருவருடைய சாப்பாட்டிற்கும், மகன் படிப்பிற்கும் செலவு செய்யத் தகப்பன் கடமைப் பட்டவர். இதை கோர்ட் மூலம் வற்புறுத்தலாம். இவர்களை 'ஏமாற்ற' என்று செய்யும் பராதீனங்கள், பராதீனம் பெறுபவருக்கு ஜீவனாம்ச பாத்தியம் இருப்பது தெரிந்திருந்தாலும் அல்லது அவர் இனுமாகச் சொத்தை அடைந்தாலும் செல்ல மாட்டா.

கேள்வி: (L 2534 சாமிநாதபிள்ளை, ஆழியூர்) புருடனால் (கலியாண காலத்தில்) மனைவிக்குச் சில ஸ்தாவர சொத்துக்கள் கிரயம் செய்யப்பட்டு, ஒரு மகளையும் ஒரு மகனையும் விட்டுவிட்டு மனைவி இறந்து போய்விட்டால் அச்சொத்துக்களுக்கு யார் வார்சு? புருடனா, மகனா, மகளா?

பதில்: மகள்.

கேள்வி: (L 2536 கிருஷ்ணன், அலங்காநல்லூர்) ஒரு உத்தியோகஸ்தர் தம்முடைய நிலங்களை மற்றொரு விவசாயிக்கு ஒத்தி வைத்து, பத்திரக் கெடுவான 7 வருடங் கழித்து ஒத்தித் தொகை கட்டி நிலத்தைத் திருப்புவதாக இருந்தால் புதிய சட்டப்படி ஒத்தித் தொகைக் குறைவு ஏற்படுமா?

பதில்: கடன் வாங்கிய உத்தியோகஸ்தர் 'விவசாயி' யாக இருந்தால் தொகைக் குறைவு ஏற்படும். கடன் கொடுத்தவர் விவசாயியா, இல்லையா, என்று பார்க்க வேண்டியதில்லை.

கேள்வி: (L2538 ராமசாமி, மறமடக்கி) இனும் கிராமத்தில் இருவார பாத்தியமுள்ள ஒரு நிலத்தின் சொந்தக்காரர் குடிவார பாத்தியத்தை மட்டில் வேறு ஒருவருக்கு ஒத்தி வைத்து (மேல் வாரத்தை மட்டில் வாங்கி வந்து) 60 வருடங்களுக்கு மேலானால் ஒத்தி வைத்தவர் பணத்தைக் கொடுத்து நிலத்தைத் திருப்பலாமா?

பதில்: போக்கியத்தை மீட்க ஏதாவது கெடுவிருந்து அதிலிருந்து 60 வருடங்களானால் காலாவதியாகிவிடும். மீட்கும் பாத்தியம் அறுபட்டுப் போய்விடும்.

பத்திரங்கள் - ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட

["வக்கீல்" 1949 அக்டோபர், நவம்பர், டிசம்பர் இதழ்களில் கிரயம், அடமானம் குத்தகை-வாடகை இவைகளுக்கான பத்திரங்களைப் பற்றியும் 1950 ஜனவரி இதழில் 'செட்டில்மெண்ட்' பத்திரங்களைப் பற்றியும் பிப்ரவரி இதழில் "டிரஸ்ட்டு" பத்திரங்களைப் பற்றியும் அவைகளுக்குரிய ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணங்களையும் விபரமாய் எழுதியுள்ளோம்.]

இனும் சாசனங்கள்

மூன் இதழ்களில் விவரிக்கப்பட்டபடி "செட்டில்மெண்ட்" அல்லது "டிரஸ்டு" பத்திரங்கள் அல்லாத மற்ற இனும் அல்லது தானத்தைப் பற்றிச் சில முக்கிய விதிகள் இருப்பதால் அவைகளைச் சரிவர, கவனிப்பது அவசியமாகும். மேலும் கீழ்க்கண்ட விதிகள் இஸ்லாமிய சட்டப்படி ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய இனும்களுக்குப் பொருந்தா. அது பிரத்யேகமாகப் பின்னே சொல்லப்படும்.

பத்திரங்கள் அவசியமா?: ஸ்தாவர சொத்தை இனும் அல்லது தானம் கொடுக்க வேண்டுமானால் அச்சொத்தை எவ்வளவு குறைவான மதிப்புள்ளதாக இருந்தாலும் (1) ஸ்டாம்பில் எழுதப்பட்டிருக்க வேண்டும். (2) இனும் அல்லது தானம் செய்பவருடைய கையெழுத்தும் குறைந்தது இரண்டு சாட்சிகளுடைய கையெழுத்தும் பத்திரத்தில் இருக்க வேண்டும். (3) பத்திரம் ரிஜிஸ்டராக வேண்டும். இவை மூன்றும் பூர்த்தியாகாவிட்டால் சட்டப்படி இனும் அல்லது தானம் ஏற்படாது. சொத்தின் உரிமை மாற்றப்படமாட்டாது. ஜங்கம சொத்துக்களை மேற்கண்டபடி பத்திரம் எழுதி, சாட்சிகளுடன் பூர்த்தி செய்து ரிஜிஸ்டர் செய்வதன் மூலம் இனும் கொடுக்கலாம்; அல்லது ஜங்கம சொத்துக்களையே யாதொரு பத்திரமுமில்லாமல் சுவாதீனம் கொடுத்து விடலாம்.

இனும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்: மேலும் யாருக்கு இனும் அல்லது தானம் கொடுக்கப்படுகிறதோ அவர் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். யாருக்கு இனும் கொடுக்கப்படுகின்றதோ அவர் மைனர் அல்லது சித்தசுவாதீனமற்றவராக இருந்தாலும், நேரில் ஒத்துக்கொள்ளச் சக்தியற்றவராக இருந்தாலும் அவருக்காகச் சட்டப்படிக்குள்ள கார்டியனாவது, வேறு பாத்தியமுள்ளவராவது அதை ஒப்புக்கொள்ளவேண்டும். இனும், இவ்விதம் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் சொத்தின் உரிமை சட்டப்படி மாறாது. இப்படி ஒரு இனும் பத்திரத்தை ஒப்புக்கொள்ள ஒரு கால வரம்பும் இருக்கின்றது. அதாவது இனும் செய்தவர் உயிருடன் இருக்கும் வரையில்தான் இவரால் செய்யப்பட்ட இனும் சாசனத்தை ஒப்புக்கொள்ளலாம். அதுவும் அவர் எவ்வளவு காலம் அதே சொத்தைக் கொடுக்கச் சக்தியுடன் இருக்கிறாரோ அதுவரையில்தான் அதை ஒப்புக்கொள்ளலாம். கொடுத்தவர் உயிருடன் இருக்கும்போது அதை அடையும்படி கண்டிருப்பவர் ஒப்புக்கொண்டுவிட்டால் போதும். பத்திரம் பின்பு ரிஜிஸ்டரானாலும் பாதகமில்லை. ஒப்புக்கொள்வது என்பது எழுத்துமூலம் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. வேறு வகையிலும் இருக்கலாம். உதாரணமாக, சொத்தைச் சுவாதீனம் எடுத்துக்கொண்டால் போதும். அல்லது வாடகை வசூல் செய்தால் போதும். இரண்டு அல்லது அதிக நபர்களுக்கு இனும் கொடுக்கப்பட்டு அதைச் சிலர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவர்கள் சம்பந்தப்பட்டவரையில் இனும் செல்லாது.

எந்தச் சொத்தை இனும் அல்லது தானம் கொடுக்கலாம்: இனும் பத்திரம் ஏற்படும் சமயத்தில் இருக்கும் சொத்தைத்தான் இனும் கொடுக்க முடியும். இனி வரக்கூடிய அல்லது உண்டாகக்கூடிய சொத்துக்

களை இனும் செய்வது செல்லாது. இனும் செய்யப்படும் காலத்தில் இருக்கும் சொத்தையும் இனி ஏற்படக்கூடிய சொத்தையும் சேர்த்து ஒருவர் இனும் பத்திரம் எழுதினல் இனி ஏற்படக்கூடிய சொத்து சம்பந்தப்பட்டவரையில் அப்பத்திரம் செல்லாது.

கொடுப்பவர் இஷ்டப்படி ரத்து செய்யக்கூடிய இனும் செல்லாது: மேலும் இனும் அல்லது தான சாசனங்களில் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் இனுமாகக் கொடுக்கப்பட்ட சொத்து, திரும்பவும் இனும் கொடுப்பவருக்கே வரக்கூடியதாய் ஷரத்துக்கள் கண்டு எழுதப்படுவதுண்டு. இனும் கொடுப்பவர் தாம் இஷ்டப்பட்ட காலத்தில் அதை ரத்துச் செய்துகொள்ளலாம் என்ற உரிமையைக் கண்டு இனும் பத்திரத்தில் எழுதிக்கொண்டால் அவ்வித இனும் செல்லாது. அதாவது சொத்தின் உரிமை மாருது. சட்டப்படி இனும் ஏற்படாது. ஆனல், இனும் கொடுப்பவரின் இஷ்டத்தைப் பொருத்ததல்லாது வேறு சந்தர்ப்பங்களில் ரத்தாவதாக ஒரு நிபந்தனை இருந்து அதை இனும் கொடுப்பவரும், வாங்குபவரும் ஒப்புக்கொண்டால் அது செல்லும்.

உதாரணம்: ஒருவர் தமக்குச் சொந்தமான 10 ஏகர் நிலங்களை வேறு ஒருவருக்கு இனுமாகக் கொடுத்து, பத்திரம் எழுதிக் கொடுக்கின்ருர். ஆனல் தாம் இஷ்டப்பட்ட காலத்தில் அந்த நிலங்களைத் திருப்பி எடுத்துக் கொள்ளலாம் என்று ஷரத்துக் கண்டு எழுதப்பட்டிருக்கிறது. இந்த இனும் பத்திரம் செல்லாது. சொத்துக்கள் இனும் கொடுத்தவருக்குச் சொந்தமாகவேதான் இருக்கும்.

உதாரணம்: ஒருவர் தமக்குச் சொந்தமான 10 ஏகர் நிலங்களை வேறு ஒருவருக்கு இனும் சாசனம் செய்துகொடுக்கிருர். ஆனல் இனும் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவர் இனும் கொடுப்பவருக்கு முன்பே இறந்துவிட்டால் அந்த நிலங்களைத் தாமே திருப்பி எடுத்துக்கொண்டு விடலாமென்று ஒரு ஷரத்து இருக்கின்றது. இதற்கு, இனும் அடைபவரும் சம்மதிக்கின்ருர்; இது செல்லும். ஏனென்ருல் இனும் கொடுப்பவருடைய இஷ்டத்தைப் பொறுத்து இப்பத்திரம் ரத்தாகாது.

பொறுப்புடன் கூடிய இனும்: பொறுப்புடன் கூடிய இனும்களை ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற கடமை இல்லை. ஆனல் ஒரே பத்திரத்தில் பல சொத்துக்கள் ஒருவருக்கு இனுமாகக் கொடுக்கப்பட்டு, அவற்றுள் சில சொத்துக்களின் பேரில் ஜாமீன், ஜீவனும்சம், போன்ற பொறுப்புக்கள் இருந்து மற்றச் சொத்துக்களின் பேரில் யாதொரு பொறுப்பும் இல்லாமல் இருந்தால், இவ்வித இனும் பத்திரத்தை ஜாடாவாக ஒப்புக்கொள்ளவேண்டும்; அல்லது ஜாடாவும் வேண்டாமென்று சொல்லிவிட வேண்டும். பொறுப்பில்லாத சொத்துக்களை மட்டில் இனுமாக ஒப்புக்கொண்டு பொறுப்புடன் காட்டியவைகளை வேண்டாமென்று சொல்லமுடியாது.

ஒருவர் தமக்குள்ள எல்லாச் சொத்துக்களையும் வேறு ஒருவருக்கு இனும் கொடுத்தால்: இவ்விதம் ஒருவருடைய சகல சொத்துக்களையும் இனுமாக அடைபவருக்கு ஆங்கிலத்தில் "யுனிவர்சல் டோனி" என்று சொல்வது. இவ்விதம் வேறு ஒருவருடைய எல்லாச் சொத்துக்களையும் இனுமாக அடைபவர், சொத்தைக்கொடுப்பவருடைய கடன்களை தாமே கொடுக்கக் கடமைப்பட்டவர். தாம் அடையும் இனும் சொத்துக்களின் மதிப்பு வரையில் கடன் முதலியவைகளைக் கொடுக்க அவர் ஜவாப்தாரி.

ஸ்டாம்பு: இனும் அல்லது தானம் கொடுக்கப்படும் சொத்தின் சரியான மதிப்பு என்ன என்று பத்திரத்தில் எழுத வேண்டும். அத்தொகைக்குக் கிரயப்பத்திரத்திற்குள்ளது போல் ஸ்டாம்பு வேண்டும். அதைப்போலவே சர்சார்ஜும் உண்டு. ரிஜிஸ்டர் கட்டணமும் அவ்விதமே. (கிரயப் பத்திரத்திற்குள்ள ஸ்டாம்பு, சர்சார்ஜு-ரிஜிஸ்டர் கட்டணம் முந்திய இதழ்களில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.)

ரிஜிஸ்டர் கட்டணம்: 1950 ஜனவரி "வக்கீல்" இதழில் இருக்கும் ரிஜிஸ்டர் கட்டண அட்டவணைப்படியே.

வருமான வரி

(K. S. செம்பகேசய்யங்கார் B. A., B. L.. அட்வகேட், மதராஸ்.)

இன்கம்டாக்ஸ் சட்டம் 1922-ஆம் வருடத்திய 11-ஆவது மத்திய சட்டம்.

வருமானத்தின் பேரில் இந்தச் சட்ட மூலமாக வரி போடப்பட்டிருக்கிறது. ஆயினும் வருமானம் சம்பாதிக்கும் நபரின் பேரில்தான் இந்த வரி. அதாவது சொத்தின் பேரில் வரி அல்ல. ஒருவருடைய வருமானத்தைக் கண்டுபிடித்து, அதன் பேரில் வரி வாங்கப்படுகிறது. வருமானத்தின் பேரில் வரி என்றதாலேயே, இந்தச் சட்டத்தினால், முதல் தொகைக்கு வரி ஏற்படாது என்பது தெரிகிறது.

வருமானம் என்பது பொதுவான வார்த்தை. அதற்கு அர்த்தம் இந்தச் சட்டத்தில் விதிக்கப்படவில்லை. ஆகவே வருமானம் என்பது எது, முதல் என்பது எது, என்பது தெரிந்து கொள்ளப்பட வேண்டும். செலவுகளைத்தள்ளி ஏற்படும் வருமானத்தின் பேரில்தான் வரி. அதாவது வருமானம் சம்பாதிப்பதற்கு ஏற்படும் செலவுகளை மாத்திரம்தான் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரிச் சட்டத்தின் 9 முதல், 12-வது பிரிவு வரையில், எந்த எந்த விதமான செலவுகள் தள்ளப்படும் என்பது விவரிக்கப்பட்டிருக்கின்றன. லாபம் உண்டாவதும் வருமானம்தான். ஒருவருக்கே அநேக தொழில்கள், வியாபாரங்கள் இருக்கலாம். அவைகள் எல்லாவற்றிலும் ஏற்படும் லாபத்தைச் சேர்த்து, வரி போடப்படும். ஒரு கம்பெனியின், பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்படும் லாப வீதமும் வருமானம்தான். அதே மாதிரி, மாதா மாதமோ, அல்லது சில மாதங்களுக்கு ஒரு தடவையோ, அல்லது வருஷ வாரியாகவோ, கொடுக்கப்படும் சம்பளமும் வருமானம்தான். பணம் கடன் கொடுத்து, அதிலிருந்து சம்பாதிக்கப்படும் வட்டியும் கவர்ன்மெண்டு பாண்டிலிருந்து வரும் வட்டியும் வருமானமே. வீடுகளிலிருந்து வரும் (வாடகை) குடக்கூலியும் வருமானம்தான். சுருங்கச் சொல்லில், ஒருவரால் சம்பாதிக்கப்படும் லாபம் எல்லாம் வருமானமென்றே, இந்தச் சட்டத்தில் கருதப்படுகிறது. விவசாயத்திலிருந்து வரும் வரும்படிக்கு, வரி கிடையாது. அதன் விபரம் பின்பு தொடரும்.

முதல் இல்லாமலேயே, தொழில் அல்லது வியாபாரம் செய்து, அதிலிருந்து வருமானம் ஏற்படக்கூடும். உதாரணமாக தரகு வியாபாரம்செய்து ஒருவர் சம்பாதிக்கக் கூடும். வியாபாரம், தொழில் என்பனவும் பொதுவான வார்த்தைகள்தான். பணம் கொடுத்து வாங்குவது, ஏற்றுமதி இறக்குமதி செய்வது, கடைகள் வைத்து சாமான்கள் வாங்கி, விற்று வியாபாரம் செய்வது, நூல் நெய்தும், பாத்திரங்கள் செய்தும் எவ்விதமான வியாபாரம் செய்தாலும், அதிலிருந்து வரும் வரும்படிகளுக்கு வரி உண்டு. எங்கு எங்கிருந்து உண்டாகும் வரும்படிகளுக்கு வரி என்பதை, ஆறாவது பிரிவு சொல்லுகிறது. சம்பாதிக்கப்பட்டு கைக்கு வந்த வருமானத்தின் பேரில்தான் வரி போடப்படும். சம்பாதிக்கக்கூடிய நிலைமையில் இருப்பது என்பதற்கு வரி இல்லை. வருமானம் ஏற்பட்ட பிறகுதான் வரி. இது விஷயம் பற்றி கோர்ட்டுகளால் பல தீர்மானங்கள் ஏற்பட்டுள்ளன.

'முதல்' என்பது பணமாகத்தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. ஒருவர் தன்னுடைய இயற்கையான சக்தியால் வருமானம் சம்பாதிக்கக்கூடும் உதாரணமாக நாட்டியம் ஆடுபவர்களின் வருமானம் அவர்கள் சாமர்த்தியம், இயற்கையழகு, முதலியவைகளைப்பொறுத்ததாயிருக்கிறது. சரீரப் பயிற்சி செய்து, குஸ்தி பழகி ஒருவர் சம்பாதிக்கலாம். நிற்க, வக்கீல்கள், டாக்டர்கள், சங்கீத வித்துவான்கள், கமி

ஷன் ஏஜண்டுகள், நகை வேலை செய்பவர், போன்ற அனேகர் பணத்தை முதலாக வைத்துக்கொள்ளாமல், வருமானம் சம்பாதிக்கலாம். அவர்களுடைய வருமானத்திற்கும் வரி உண்டு.

ஆயினும் 'வருமானம்' என்பது என்ன? இச்சட்டத்தின் 6 ஆவது பிரிவு இதை விளக்குகின்றது. (1) சம்பளம். (2) வட்டி. (3) சொத்திலிருந்து ஏற்படும் வரும்படி. (4) தொழில், வியாபாரம் இவைகளிலிருந்து ஏற்படும் வரும்படி. (5) வேறு விதமான வருமானங்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. காபிரைட், என்ற ஏகதேச சுவாதீன பாத்தியதையையும், 'முதல்' எனச் சொல்லலாம். சுரங்கத்திலிருந்து ஒருவர் அடையும் உலோகத்திலிருந்தும் வரும்படி ஏற்படக்கூடும். சில சமயங்களில் வருமானத்தையே முதலாகப் பாவிக்கும்படி ஏற்படக்கூடும். இப்படி எவ்வளவு விதமான விஷயங்களை 'முதல்' என்று குறிப்பிடலாம் என்பதைப் பற்றி அனேகத் தீர்மானங்கள் உள்ளன.

வருமானம் இந்தியாவில் அடையப்பட்டால்தான், வரி போட இந்தச் சட்டம் அதிகாரம் கொடுக்கிறது. மேலும் முன் வருடத்திய வருமானத்தின் பேரில் தான் அடுத்த வருடத்தில் வரி போடப்படுகின்றது. ஒருவர் எங்கு வசித்தாலும், இந்தியாவில் அவருக்கு வருமானம் உண்டாகும் பட்சத்தில் அவருக்கு வரி உண்டு. ஆனாலும் அவர் இந்தியாவாசியாக இருக்கவேண்டும். மேலே சொல்லியபடி வருமானம் வரக்கூடிய பாத்தியதை மாத்திரம் போதாது. வருமானம் வந்த பிறகுதான் வரி ஏற்படும். அயல் தேசங்களில் வரும்படி கிடைத்தாலும், இந்தியாவில் எப்பொழுது அந்த வரும்படி கிடைக்கப்படுகிறதோ, அப்பொழுதுதான் வரும்படி போடலாம். ஆகவே சொத்து அயல் ஊரில் இருந்தாலும் வரும்படி சம்பாதிப்பவர் இந்தத் தேசத்தில் வசித்தால் அவருக்கு வரி உண்டு. இந்தத் தேசத்தில் வரும்படி ஏற்பட்டு, அவர் அயல் நாட்டில் இருந்தாலும், அவருக்கு வரி உண்டு. 6-ஆவது பிரிவின், 5-ஆவது விவரம், அயல் நாட்டிலிருந்து ஏற்படும் அனேக விதமான வரும்படியையும் உட்படுத்தும்.

வருமானத்தை ஒருவர் நேரில் பெறலாம்; அல்லது அவர் ஏஜெண்டும் அடையலாம். அவர் பாங்குக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கலாம். வட்டித் தொகை வருடா வருடமாவது மாதா மாதமாவது கெடு ஏற்படுவது வழக்கம். அப்படி வசூலித்தால்தான் வரி ஏற்படும். வட்டி செலுத்த வேண்டிய தவணை வந்தால் மாத்திரம் வரி ஏற்படாது. வட்டியும் கொஞ்சம் முதலும் சேர்த்து ஒருவர் கொடுத்தால் வட்டிக்கு மாத்திரம்தான் வரிபோட அதிகாரமுண்டு. கோர்ட்டில் தாவா செய்து, சொத்துக்களை டிக்ரீ தாரரே ஏலம் எடுத்தால், முதல் முதலில் அத்தொகையில் செலவு தொகைகள் தள்ள வேண்டும், பிறகு முதல் தொகையை நீக்கிப் பாக்கித் தொகை ஏற்பட்டால் அதற்கு மாத்திரம்தான் வரி.

இந்தச் சட்டத்தில் ஒருவரின் கைக்கு வரும் அல்லது நபர் அடையும் வருமானம் தவிர, சில விஷயங்களில் அவருக்கு உண்டாகும் அல்லது உண்டாகக்கூடிய (Accruing or arising) வருமானத்தையும், அடையப்பட்ட வருமானமாக கருதப்படுகிறது. ஒருவர் இந்தியாவில் வசித்தாலும், வசிக்காவிட்டாலும் இந்த விஷயங்களில் வரி போடப்படும். 4-ஆவது பிரிவு இங்கு நோக்கத்தக்கது. ஆனால் 42-ஆவது பிரிவில் இந்திய வாசியில்லாதவருக்கு எப்படி வரி போடப்படுவது என்பதை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தியவாசி இல்லாதவரும், இந்தியாவில் தொழில் அல்லது வியாபாரம் நடத்தி வருமானம் சம்பாதித்தால், அப்படிப்பட்ட வியாபார சம்பாத்தியத்திற்கு வரி போட அதிகாரம் இந்தப் பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

கண்ட்ரோல் - லைசென்ஸ் - ரேஷன் - விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

ஜமீன் - இனும் ஒழிப்புச் சட்ட விதிகள்

எஸ்டேட் உத்தியோகஸ்தர்களை மாற்றலாம்: சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்படும் ஜமீன் எஸ்டேட்களில் ஏற்கனவே வேலை பார்த்து வந்த உத்தியோகஸ்தர்களையும் சிப்பந்திகளையும் சர்க்கார் இஷ்டப்பட்டால் தங்களுக்குள் வேலை பார்க்க மறுபடியும் அமர்த்திக் கொள்ளலாமென்று ஏற்கனவே விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவைகளுடன் ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது அப்படி வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருப்பவர்களை ஒரு எஸ்டேட்டை விட்டு வேறு எஸ்டேட்டுக்கு மாற்றவும் சர்க்காருக்கு அதிகாரம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு ஜில்லாவுக்குள் உள்ள எஸ்டேட்டுக்கு ஜில்லா கலெக்டரே மாற்றலாம். ஜில்லா விட்டு ஜில்லாவாக இருந்தால் ரெவுன்யூ போர்டார் மாற்றலாம். அப்படி மாற்றப்படும் உத்தியோகஸ்தரின் சம்பளம் மாற்றுவதால் பாதிக்கப்படாது.

(24-1-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 30)

சர்க்கார் நிர்வாகம் செய்யும் ஜமீன் - இனும் கிராமங்களில் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் :

சென்னை 'லாண்ட் என்க்ரோச்மெண்ட் ஆக்ட்' என்ற நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் படி, கலெக்டருக்குள்ள அதிகாரங்கள் இப்பொழுது ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டப் பிரகாரம் சர்க்கார் நேரடியாக நிர்வாகம் செய்யும் எஸ்டேட் மானேஜர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. டிப்டி கலெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத மானேஜர்களுக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் அந்தஸ்துள்ள மானேஜர்களுக்கு செக்ஷன் 3,5 பிரகாரம் (தீர்வை விதிக்கவும் அபராதம் விதிக்கவும்) அதிகாரம் உண்டு.

(31-1-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 227)

ஜவுளி

டிபாசிட் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது: 1948-ஆம் வருடத்திய சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவின்படி வியாபாரிகள் ரூ. 200/-ம் மொத்த கன்சைனிகள் ரூ. 1000/-ம் டிபாசிட் கட்ட வேண்டுமென்று இருந்த ஷரத்து அடியில் கண்டபடி திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது: வியாபாரியாக இருந்தாலும், தென்னிந்திய மில்களில் (பக்கிங்ஹாம் கர்னடிக் மில்ஸ், மேட்டூர் மில், லாயல் டெக்ஸ்டைல் மில் இவை தவிர மற்ற மில்களில்) உற்பத்தி செய்யப்படும் ஜவுளிக்கு மொத்தகன்சைனியாக இருந்தாலும் டிபாசிட் ரூ. 200/- கட்ட வேண்டும். பம்பாய் அதிக உற்பத்தி இடங்களில்(Bombay surplus area) உற்பத்தி செய்யப்படும் ஜவுளிக்கு மொத்த கன்சைனி மட்டில் ரூ. 1000/- டிபாஸிட் கட்டவேண்டும்.

(7-2-1950 சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் II பக்கம் 19)

பருத்தி வியாபாரிகள் கண்ட்ரோல் அறிக்கை :

1949-ஆம் வருடத்திய பருத்திக் கட்டுப்பாடு உத்தரவின்படி, லைசென்சுபெற்ற பருத்தி வியாபாரிகள் ஒவ்வொரு பாதி மாதத்திற்கும் உள்ள கணக்கை நமூனா C படி டைரெக்டர் ஆப் கண்ட்ரோல்டு கமாடிடிஸ் (Director of controlled commodities) என்ற அதிகாரிக்கு ஒவ்வொரு பாதி மாதம் முடிந்த 5 தினங்களுக்குள் அனுப்ப வேண்டியது. அப்படி அனுப்பாதவர்களுடைய லைசென்சும் ரத்து செய்யப்பட்டு பிராசிகூஷனும் தொடரப்படலாம்.

(7-2-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 137)

சிமெண்டு

பர்மிட் இல்லாமல் 20 மூட்டைகள் வரை வாங்கலாம்

சிமெண்ட் விற்பனை சம்பந்தமாய், சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகள் 23—8—1946 தேதி சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 725-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் ஷரத்துகள் கீழ்க்கண்டபடி தளர்த்தப்பட்டிருக்கிறது:

1. சிமெண்ட் வியாபாரம் செய்ய லைசென்சு பெற்ற வியாபாரிகள், (கௌரவ சிமெண்ட் கண்ட்ரோலரின் அனுமதி பெற்றுக்கொண்டு) உண்மையாகச் சொந்த வேலைக்காக, சிமெண்ட் வாங்குபவர்களுக்கு, நபர் ஒன்றுக்கு 20 மூட்டைவரையில், யாதொரு பர்மிட்டுமில்லாமல், விற்பனை செய்யலாம். ஆனால் ஒவ்வொரு மாதமும் அந்த வியாபாரி தருவிக்கும் ஸ்டாக்கில் சரிபாதியையும், முந்திய மாதங்களில் விற்பனை ஆகாமல் தங்கி விட்ட ஸ்டாக்கையும்தான் இவ்விதம் பர்மிட் இல்லாதவர்களுக்கு விற்க முடியும்.

(விசாகபட்டணம், கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், சித்தூர், பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, கர்னூல் இந்த ஜில்லாக்களில் ஸ்டாக்கில் 40%-ம் முந்திய மாதப் பாக்கியையும்தான் இப்படி விற்கலாம்.)

(7—2—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 121)

ஜீனி

சர்க்கரை ஆலைகளிலுள்ள எல்லாச் சர்க்கரை ஸ்டாக்கும் கட்டாயமாகச் சென்னை சர்க்காருக்கு விற்கப்பட்டதாகப் பாவிக்கப்படவேண்டுமென்று சர்க்காரால் ஒரு கண்ட்ரோல் உத்தரவு ஏற்பட்டிருந்தது. இந்த உத்தரவு 29—9—1949 தேதி சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகி இருந்தது. (“வக்கில்” நவம்பர் இதழ் 23-ஆம் பக்கம் பார்க்கவும்.) இந்த உத்தரவை இப்பொழுது சர்க்கார் ரத்து செய்து விட்டார்கள்.

(31—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 130)

காகிதம்

சுவரொட்டி விளம்பரங்கள் (போஸ்டர்கள்)

பேப்பர் கட்டுப்பாடு (சிக்கன) உத்தரவு (1945) 11-வது ஷரத்தில் கண்ட விஷயங்களை இம்மாகாணத்திலுள்ள லித்தோ உள்பட மற்ற அச்சகங்கள் சரிவர பின்பற்றுவதில்லை என்று மேற்படி ஷரத்தில் கண்ட நிபந்தனைகளை விளக்கி சென்னை சர்க்கார் 17—2—1950-ல் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதன் விபரம்: போஸ்டர் பேப்பர் தவிர மற்ற காகிதங்களில் சுவரொட்டி விளம்பரங்கள் (போஸ்டர்கள்) அச்சடிக்கவும் ஒட்டவும் கூடாது; 600 சதுர அங்குலத்திற்கு மேல் ஒரு போஸ்டரும் இருக்கக்கூடாது; ஒரே விளம்பரத்தைப்பற்றிய போஸ்டர்களை ஒன்றுக்கொன்று 100 அடிக்குள் இருக்கும்படி ஒட்டவும் மற்றபடி விளம்பரப்படுத்தவும் கூடாது; (ஆனால் அந்த விளம்பரம் சம்பந்தமான கட்டிடங்களில் இவ்விதம் ஒட்டுவது தடுக்கப்படவில்லை.) பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவைகளின் விற்பனை சம்பந்தமான போஸ்டர்கள் வெளியிடுவது அல்லது ஒட்டுவது தடுக்கப்பட்டிருக்கிறது. செய்திகளை விளம்பரம் செய்யும் போஸ்டர்கள் கூடாது; ஆனால், இதற்காக இரண்டு பக்கமும் ஏற்கனவே அச்சடிக்கப்பட்டிருக்கும் நியூஸ் பிரிண்ட் காகிதத்தில் மறுபடியும் போஸ்டர்கள் அச்சடித்து விளம்பரம் செய்யலாம். குதிரைப் பந்தயங்கள், போட்டிகள் முதலியவை சம்பந்தமாக உள்ள லேவாதேவிக்காரர், கமிஷன் ஏஜண்டுகள், புக் மேகர்கள் முதலானவர்கள் தொழில்பற்றிய போஸ்டர்கள் கூடாது. இவ்விஷயங்களை லித்தோ முதலிய அச்சகங்களின் நிர்வாகஸ்தர்கள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விற்பனை வரி

விற்பனை வரிச்சட்டம் - விதிகள்

(1) விற்பனை வரிச்சட்ட விதிகளின்படி ஒரு வியாபாரியின் மொத்த வியாபாரம் எந்த மாதத்தில் ரூ. 7500 ஐத்தொடுகிறதோ அதற்கடுத்த மாத முடிவுக்குள் அவ்வியாபாரி ரூ. 6/- செலுத்திப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ளவேண்டுமென்றும், பிறகு ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதல் தேதிக்குள் அதே கட்டணம் கட்டி ரிஜிஸ்ட்ரேஷனைப் புதிப்பித்துக் கொள்ளவேண்டுமென்றும் விதிகள் இருக்கின்றன. ரிஜிஸ்டர் செய்து கொள்பவருக்கு விற்பனை வரி அதிகாரியால் ஒரு சர்டிபிகேட் கொடுக்கப்படும். இந்தச் சர்டிபிகேட் கெட்டுப்போய் விட்டாலும் தற்செயலாய் விழைகப்போய்விட்டாலும் அணு 8 மட்டில் செலுத்தி, ஒரு நகல் (ட்யூப்ளிகேட்) சர்டிபிகேட் மறுபடியும் பெற்றுக்கொள்ளலாமென்று இப்பொழுது ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது.

(2) கடலை எண்ணெய் புண்ணுக்கு உற்பத்தி செய்யும் வியாபாரிகள் மாதந்தோறும் அனுப்பவேண்டிய கணக்கு (ரிடர்ன்) நமூனு A 9-படி இருக்க வேண்டுமென்று விதிகள் திருத்தப்பட்டிருக்கின்றன. நமூனு A 9-ம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(3) விற்பனை வரி நமூனுக்கள், வரியே இல்லாத சாமான்களையும், பாதி வரி மட்டில் வஜா உள்ள சாமான்களையும் தனித்தனியாகக் காண்பிக்கும்படி திருத்தப்பட்டிருக்கின்றன.

(24—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I சூல் சப்ளிமெண்ட் பக்கம் 35)

பாதி வரி வஜா: விற்பனை வரிச் சட்டம் 7-ஆவது செக்ஷன்படி, சில கைத்தொழில் வேலைப்பாடு செய்யப்பட்ட சாமான்களை இம்மாகாணத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு விற்று, சாமானும் அனுப்பப்பட்டால் அவைகளின் விற்பனை வரியில் சரி பாதி வஜா (Rebate) செய்யச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அதை அனுசரித்து இது வரையில் 58 வித சாமான்களுக்குச் சர்க்கார் பாதி வரி வஜா செய்திருக்கின்றனர். ("வக்கீல்" 1949, ஜூலை இதழ், பக்கம் 17, 18 களில் இவைகளின் விபரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது). இப்பொழுது இந்த ஜாப்தாவில், 59-ஆவதாக டைப்ரைடிங் மெஷின்களையும், அவைகளுக்கு உபயோகப்படும் புருஷ், ரிப்பன் இவைகளும் இந்த ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(7—2—1950 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் I பக்கம் 284)

ஷாப் சட்டம்

விதி விலக்கு: வருமான வரி அதிகாரிகளிடம் கக்ஷிக்காரர்களுக்காக ஆஜராகும் 'இன்கம்டாக்ஸ் பிராக்டிஷனர்'களுடைய காரியாலயங்களுக்கு ஷாப் சட்டத்தின் எல்லா விதிகளிலிருந்தும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(14—2—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 323)

இறக்குமதி

இறக்குமதி லைசென்சு மனுவுக்கு கட்டணம்: இறக்குமதி செய்ய லைசென்ஸ் வேண்டுமென்று 31—12—1949 - க்கு பிறகு மனுச் செய்பவர்கள் கீழ் கண்டபடி கட்டணம் கட்டவேண்டும்.

1. ரூ. 10,000-க்கு அதிகப்படாத விலையுள்ள சாமான்களுக்கு இறக்குமதி லைசென்சு வேண்டுமென்ற போடும் மனுவுக்கு கட்டணம் ரூ 10. (வியாபாரத்திற்கல்லாமல் சொந்த உபயோகத்திற்கு ரூ. 100 - க்குள் சாமான்கள் இறக்குமதி செய்ய மனுவுக்கு கட்டணம் கிடையாது.)

ரூ. 10,000-க்கு மேல் ரூ. 1,00,000 வரை மதிப்புள்ள சாமான்களுக்கு இறக்குமதி லைசென்சு மனுவுக்கு கட்டணம் ரூ 25.

3. ரூ. 1,00,000 - க்கு மேற்பட்ட சாமான்களை இறக்குமதி செய்ய லைசென்சு மனுவுக்கு கட்டணம் ரூ. 100.

187695
சென்னை-600 008

சர்க்கார், ஸ்தல ஸ்தாபனங்கள், கல்வி, தர்ம ஸ்தாபனங்கள் சொந்த உபயோகத்துக்காக கோரும் லைசென்சுகளுக்கு இக்கட்டணம் இல்லை.

(14—2—1950 சென்னை சர்க்கார் கெஜட், பாகம் II, பக்கம் 157)

மேற்கண்ட கட்டணத்தை சர்க்கார் கஜானு அல்லது இம்பீரியல் பாங்கி அல்லது ரிசர்வு பாங்கியில் மத்திய சர்க்கார் கணக்கில் "XLVI Miscellaneous" என்ற தலைப்பில் "Import Licence fees" என்ற பேரேட்டில் கட்டவேண்டும். பணம் கட்டும் ரசீதில் ஏற்றுமதி மனு விபரமும், எந்த சாமான்கள், என்ன மதிப்புள்ளவை என்ற விபரமும் காண்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ரசீதை இறக்குமதி லைசென்சுக்காகப் போடும் மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டும். மனுவிலும் ரசீது விபரம் இருக்கவேண்டும், ரசீது இல்லாத மனு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டணத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(21-2-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 182)

ஜெயில்படி உயர்த்தப்பட்டது

சிவில் கோர்ட் டிக்ரிகளை நிறைவேற்றிக் கடன்காரர்களை ஜெயிலுக்கு அனுப்பினுல், அவர்களுக்காக ஒவ்வொரு மாதமும் கட்ட வேண்டிய ஜெயில்படி அடியில் கண்டபடி உயர்த்தப்பட்டிருக்கிறது.

	மாமிசம் சாப்பிடுப வருக்கு	மாமிசம் சாப்பிடாத வருக்கு
முதல் வகுப்பு	50—0—0	46—0—0
இரண்டாவது வகுப்பு	25—0—0	23—0—0

(31—1—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 219)

குறிப்பு: சர்க்கார் கெஜட்டில் 'சிவில் புரொஸீஜர் கோடு 57-ஆவது செக்ஷன் படி' மேற்கண்ட விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று போடுவதற்குப்பதிலாக 'கிரிமினல் புரோஸீஜர் கோடு 57-ஆவது செக்ஷன்படி' என்று போட்டிருப்பது அச்சுப் பிழையாக இருக்கலாம்.

ரிஜிஸ்டர் S.Y. மணி அண் கோ No. 95951

TRADE MARK

T. L. 2. No. 851

புரொப்ரைட்டர்:
S. வைத்திலிங்கம்

புகையிலை வியாபாரம், மடத்துத் தெரு, கும்பகோணம்.

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam. Edited and Published by R. NARASIMHAN B. A., B. L., at No. 73, Dabir West Street, Kumbakonam for Southern Book House Ltd.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சிவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை : 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ் கும்பகோணம்.